நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இதழ் 15 பெப்/மார்ச் 1992 விலை 5/-



உள்ளே:
**தெரிவுக்குழு தீர்வைத் தராது - காமினி**

பார்க்க பக்கம் 7

# வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமே அல்ல

## நளின்



கடந்த நூற்றாண்டுக்கு முன்னர் இந்நாட்டில் ஒரே ஒரு இனம் தான் இருந்தது. அது சிங்களவர் தான் என்கிறார் ஜாதிக சிந்தனய என்கிற பௌத்த சிங்கள தேசியவாதக் கோட்பாட்டின் பிதாமார்களில் ஒருவரான கலாநிதி நளின் டி சில்வா.

அவர் தனது பேட்டியில் "வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் அல்ல. கிழக்கில் முன்னர் தமிழர்கள் வாழவில்லை. 1848 வெல்லஸ்ஸ கிளர்ச்சியின் பின்னரே ஆங்கிலேயரால் தமிழர்கள் அங்கு குடியேற்றப்பட்டார்கள். வடக்கிலும் யாழ்ப்பாணத்தில் இந்தியாவிலிருந்து வந்து போய்க் கொண்டிருந்த வந்தேறு குடிகளே காணப்பட்டனர் எனக் கூறுகிறார். அவரது பேட்டி 6ம் பக்கத்தில் முழுமையாகத் தரப்படுகிறது.

# ரஞ்சனைக் கொன்றதுயார்? பிரபா வெளிப்படுத்துகிறார்



*முன்னாள் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கடந்த வருடம் நடைபெற்ற குண்டு வெடிப்பில் காலமானார். அவர் பயணம் செய்த வாகனத்தினுள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததிலேயே அவர் கொல்லப்பட்டார்.*

*இக்குண்டு வெடிப்புக்கு காரணமாக வாகனத்தில் குண்டைப் பொருத்தி வெடிக்க வைத்தவர்கள் கறுப்புப்பூனைப் படையினர் (Black Cats Regiment)*

*கறுப்புப் பூனைகள் மூலமாக இதனைச் செய்தது ஒரு பிரபலமான அரசியல்வாதி. ரஞ்சனைப் பற்றி அவருக்கேற்பட்ட அவநம்பிக்கையால் தான் அவர் ரஞ்சனை கொலை செய்துள்ளார்.*

*எனவே இந்தக் கொலைக்குக் காரணமான கறுப்புப் பூனைகள் என்றால் என்ன? அது யாருடையது? ரஞ்சன் கொலை செய்யப்பட்டது ஏன்? இந்த கறுப்புப் பூனைகளுக்கு ரஞ்சனை கொலை செய்ய உத்தரவு வழங்கிய அரசியல்வாதி யார்? ரஞ்சனைக் கொல்வதற்கான காரணமும், அவசரமும் இந்த அரசியல் வாதிக்குள் எழுந்தது எப்படி?*

*இவற்றிற்கான விபரங்களை புலிகளின் தலைவர் பிரபாகரன்*

பார்க்க பக்கம் 12

## சிங்கள இனவாதத்தை 'றோ' தூண்டுகிறது. சண்டே ஒப்சேவர் குற்றச்சாட்டு.

அரசின் சண்டே ஒப்சேவர் பத்திரிகை எழுத்தாளரான அநுருத்ர திலகசிறி ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஐம்பதுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து உருவாக்கிய 'ஹெல உரிமய' இயக்கத்தின் ஊடாக இந்திய உளவுத்துறை சிங்கள இனவாதத்தைத் தூண்ட முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டி உள்ளார்.

மார்ச் முதலாம் திகதிய சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் "கண்ணாடி அணிந்த 'ஹெல உரிமய' முக்கியஸ்த்தர் ஒருவருக்கு மிகப் பெரிய இந்திய வர்த்தகக் குடும்பம் ஒன்றுடன் நெருங்கிய தொடர்பிருப்பதாகவும், அதனூடாக இந்திய உளவு நிறுவனமான 'றோ' தென்பகுதியில் இனக்கலவரங்களைத் தூண்டி பிரேமதாச அரசைக் கவிழ்க்க முயற்சி எடுக்கிறது எனவும் அரசு சார்பான இந்தப் பத்தி எழுத்தாளர் குற்றம் சாட்டி எழுதியுள்ளார்.

## யாருக்கு அக்கறை

இந்த ஆசிரிய தலையங்கத்தை எழுதவாரம்பிக்கிற போது யாழ் மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஊரடங்கு அமுலில் உள்ளதாகத் தகவல் கிடைத்தது. தாக்குதல் நடாத்துவதற்கு ஏதுவாக ஊரடங்கைப் பிறப்பித்துள்ளதாக கூட்டுப்படைத் தலைமைப் பேச்சாளரான கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்திருந்தார்.

முல்லைத்தீவில் மணலாறு,கொக்குத்தொடுவாய் பகுதிகளில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட படையினர் சீன டாங்கிகள் சகிதம் விமானப்படையின் உதவியுடன் தாக்குதல் நடாத்துவதாகவும், வல்வெட்டித்துறையில் புலிகளின் கடற்படைத் தளமான 'கடற்புறா'வைவிமானக் குண்டுவீச்சு மூலம் தாக்கித் தகர்த்து விட்டதாகவும் அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதிலுள்ள முதலாவது விடயம் என்னவென்றால்; இவை யாவும் யாழ்ப்பாண 'அடி'க்கான ஆரம்ப முஸ்தீபு நடவடிக்கைகளாகத் தோற்றமளிப்பதுடன், இந்த யாழ்ப்பாண அடி தரப் போகும் உயிரிழப்புக்கள், சேதங்கள், இழப்பீடுகள் என்பனவற்றிற்குமப்பால் மொத்தத்தில் கருவறுக்கப்படப் போவது தமிழ் மக்களின் தேசியக் கோரிக்கைகளும் தான் என்பதைக் கவனத்திற் கொண்டாக வேண்டியுள்ளது.

இரண்டாவது; இந்த கொக்குத் தொடுவாய் தாக்குதலின் அரசின் உள்நோக்கம் என்னெவன்றால், வட கிழக்கு இணைப்பை துண்டாடுவதற்கான சதியில் மணலாற்றை 'வெலிஓயா'வாக்க ஏற்கனவே ஏற்படுத்திய சிங்களவர் குடியேற்றங்களை விஸ்தரிப்பதும், மேலும் புதிய சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவதுமே ஆகும்.

இவ்விரு நோக்கங்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கைகளைப் பற்றி எதுவித அக்கறையுமின்றி இதனூடாக அரசு கைப்பற்றும் பிரதேசங்களை தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தம்மிடம் தரும் என இங்குள்ள முடியிழந்த சிற்றரசர் பலர் மஞ்சத்திலிருந்து பகல் கனாக் காணுகின்றார்கள். தமக்கு சாமரம் வீசியதற்காய் இவ்வாறு கொடுப்பதற்கு அரசு ஒரு வேளை சம்மதித்தாலும் இராணுவத்தினர் ஒரு போதும் சம்மதிக்கப் போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இது ஒரு புறம்,

மறுபுறத்தே 90 ஜூனிலிருந்து இறுதி யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கிற புலிகளுக்கு அவர்கள் கோலோச்ச யாழ்ப்பாண இராசதானி மட்டுமாவது இப்போது மிஞ்சுமா என்பதே சந்தேகத்துக்குரிய விடயமாகிப்போய்விட்டது.

இதில் யுத்தத்தை நடாத்திக்கொண்டே சமாதானத்தைப்பற்றிப் பேசுவதில் யாரும் யாருக்கும் சளைத்தவர்களில்லை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறார்கள்.

இடையே வந்த தொண்டமானின் சமாதானச் சலசலப்பும் ஓய்ந்துபோய்விட்டது.

மொத்தத்தில் வட கிழக்கில் மக்கள் வாழ்கிறார்கள் என்பது மறந்தே போய்விட்டது அரசுக்கு. புலிகளுக்கு அவர்கள் மக்களல்ல மாக்கள். மற்றையவர்களுக்கு அதுவுமில்லை.

அப்போ மக்களைப்பற்றி அக்கறைப்படப் போவது யார்?

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது தமிழ் நாட்டு அரசு. 'தமது சுய விருப்பத்தின் பேரில் அவர்கள் நாடுதிரும்புவதாக' அது வேறு கதை விடுகிறது.

பலவந்தமாகவும், மிரட்டியும் 'சுயவிருப்பத்தின் பேரில் செல்வதாக கடிதம் வாங்கிக் கொண்டு அவர்களை அது அனுப்புகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், கடிதத்தில் என்ன இருக்கிறது என்று தெரியாமலே? (அது ஆங்கிலத்தில் இருக்கிறதாம்!) கையெழுத்துப் போட்விட்டு வருகிறார்கள் அகதிகள்.



சொந்த நாட்டிலேயே அகதிகளாக இருக்கிற மக்களுக்கு இந்தியாவும் சரி இலங்கையும் சரி ஒன்றுதான். எங்குமே பாதுகாப்பு இல்லை என்ற நிலை.

வருகிற அகதிகள் கொல்லப்பட்டால், அல்லது அவர்களுக்கு ஏதாவது நடந்தால் அதற்கு யார் பொறுப்பு...?

என்னவென்று தெரியாமலே கையெழுத்துப் போட்ட அந்தக் கடிதங்கள் பொறுப்பேற்கும் போலும்.

வாழ்க ஜெயலலிதா நாமம்!

இலங்கைப் பாராளுமன்றத்தில் திடுக்கிடும் தகவல்களை அவற்றின் தாக்கம் குறித்த அக்கறையின்றி வெளியிடும் அசாத்திய துணிச்சலும் திறமையும் படைத்த ஒருவர் இருக்கிறார்.

அண்மையில் இலங்கையின் அரச வங்கிகள் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துகள் பலத்த சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும்.

அவர் வேறு யாருமல்ல. பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், நிதியமைச்சர் தொழிலமைச்சர் என்று பல 'பொறுப்புகளை' சுமந்து கொண்டிருக்கும் டி. பி. விஜேதுங்க அவர்கள்தான்.

அண்மையில் அவர் வடக்கு கிழக்கு யுத்தம் தொடர்பாக தெரிவித்த கருத்துக்களும் இவ்வாறான ஒரு திடுக்கிடும் தகவலே.

ஒன்றுக்கொன்று எதிரெதிரான கருத்துக்களை தெரிவிப்பதில் கூட அவர் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

அண்மையில் வலப்பனையில் நடந்த கூட்டம் ஒன்றில் இவ்வாறு பேசி இருந்தார்;

"வடக்கு கிழக்கு யுத்தத்தை இன்னும் ஒரு சில மாதத்தில் முடிவுக்கு கொண்டுவந்து விடுவோம்.... எதிரிகளைக் கொன்றேயாயினும் எமது நாட்டைப் பாதுகாப்போம்."

இதற்குப் பிறகு அவர் பாராளுமன்றத்தில் பேசும் போது இப்படி அறிவித்தார்.

"இனப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கான யோசனைகளை புலிகளுக்கு அரசாங்கம் முன்வைக்கக் கூடியதாக இருக்கும் வரை-அவற்றைப் புலிகள் ஏற்கும் நிலை உருவாகும்வரை ஆயுதப்படைகள் தமது நடிவடிக்கைகளைத் தொடர்வர்"

சரி, புலிகளுக்கு அரசாங்கம் தீர்வுகளை முன்வைக்கத் தடையாக இருப்பது என்ன?

பிரதமர் வலப்பனை கூட்டத்தில் முன்வைத்த 'தீர்வு' ஒரு தீர்வு அல்ல என்றால் அதன் தீர்வுகளை முன்வைக்க தடையாக இருப்பது என்ன?

பாவம், பிரதமருக்கு இது தெரியவில்லை. அவருக்கு யாராவது இதுபற்றிச் சொல்லித்தர வேண்டும்; அவரசமாக, இல்லாவிட்டால் அவர் கொலை உத்தரவு வழங்கி விடப் போகிறார்....

எல்லாவற்றையும் 'இலகுவாக' எடுத்துக் கொள்கிற பல 'பொறுப்புகளை' சுமந்து கொண்டிருக்கிற பிரதமருக்கு இது தெரிந்திருக்க நியாயமில்லை.

ஆம்! அதுதான் அரசிடம் ஒரு திட்டமும் இல்லை என்பது! இதை யாராவது அவருக்கு தெரிவிப்பீர்களா?

கடந்த மாதம் பரவலாக அடிப்பட்ட 'தொண்டமான் யோசனைகள்' இன்று பேசுவாரற்ற விடயங்களாகி விட்டன. ராஜீவ் கொலையில் பிரபாகரனுக்கு பிடிவிழுந்து விடப்பட்டதுடன், தொண்டமானின் யாழ் பயணமும் ஒத்திப் போடப்பட்டுள்ளது என்ற கதை போய் கைவிடப்பட்டதென்றாகி விட்டது.

தொண்டமானின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச புலிகள் தயாராக இருப்பதாக அறிவித்த போதும், தொண்டமானே இப்போது அதுபற்றிப் பேசுவதை விட்டுவிட்டார்.

வழமைபோல இதுவும் பிசுபிசுத்துவிட்டது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தொண்டமான் முன்வைத்த தீர்வுகளை விட சுருக்கமான, தெளிவான, நடைமுறைச் சாத்தியமான, பெரும்பான்மையினர் விரும்புகிற ஒரு தீர்வை இந்தப் பந்தியில் என்னால் வைக்க முடியும். அது பிரச்சினையை தீர்க்க மிகவும் இலகுவான ஒரு வழி.

"ஆனால் என்ன பிரயோசனம்?

"பிரச்சினையை தீர்ப்பதில் தான் அரசுக்கு எந்த அக்கறையும் கிடையாதே என்கிறார்" எமது நண்பர் ஒருவர்.



அதனாலென்ன, நான் சொல்லுவது அவசியம் என்று கருதுகிறேன்.

1. வடக்கு கிழக்கு தற்காலிக ஈணைப்பை இல்லாமல் செய்வது.
2. தமிழ் மக்களின் குடியியல் உரிமையை ரத்துச் செய்வது.
3. தமிழ்ப் பிரதேசங்கள் என்று சொல்லப்படுபவை உண்மையில் சிங்கள மக்களுடையதே சிங்கள மக்கள் அவற்றை மீள எடுத்துக் கொள்ளலாம் என அறிவிப்பது; இதற்கான உதவிகளை செய்வது.
4. தமிழ் பிரதேச அரச ஊழியர்களை வேலை நீக்கம் செய்வது. கப்பல், உணவு மற்றும் பாவனைப் பொருட்கள் விநியோகத்தைத் தடுப்பது.
5. பாக்கு நீரிணையை சுற்றி இந்தியப்படையின் துணையுடன் காவலரண் போட்டு வெளியேற முயலும் அகதிகளை/ புலிகளை சுட்டுத் தள்ளுவது.
6. நல்லூர் கந்தசாமி கோவிலை இடித்துவிட்டு அதில் ஒரு புத்த விகாரை எழுப்புவது.
7. இவற்றை நடைமுறைப்படுத்த உதவிக்கு தமிழ் முன்னாள் விடுதலை இயக்கங்களையும் பயன்படுத்துவது.
8. கடைசியாகவும் முக்கியமானதும் 'தனிச்சிங்கள சட்டத்தை' திரும்ப அமுல்படுத்தி தமிழ் பேசாமல் விடவும் புதிய மொழி ஒன்றை கற்றுக் கொள்ளவும்-அது சப்பானிய மொழியாயினும் பரவாயில்லை- ஒரு காலக் கெடுவிதித்து அதன்பின் தமிழ் பேசுவது மரணதண்டனைக் குற்றமாக அறிவிக்கப்படுவது.

நடைமுறைப் படுத்துவார்களோ என்னவோ?



சரிநிகர், மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்கலளயும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்;

ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு - 3.

சந்தா;
ஒருவருடம் :
உள்நாடு; 60/=
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ்ப்பாண'அடி' யாருக்கு லாபம்?

பிரம்மா



யாழ்ப்பாணம் அடி எப்போது விழும் என இன்று பலரும் கேட்கிறார்கள். எப்போது அது நடக்கும் என்பதை நோக்குவதை விட யாழ்ப்பாணக் கைப்பற்றலில், சிங்கள-பௌத்த வாதத்திற்கும், பிரேமதாசாவிற்கும், இராணு வத்திற்கும், இந்தியாவிற்கும் உள்ள பல்வேறுபட்ட கருத் தோட்டங்களையும் திரை மறைவிலான இராசதந்திர நாடகங்களையும் அவதானிக்க வேண்டியுள்ளது. பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

அ. யாழ்ப்பாணத்தின் மையத்தைக் கைப்பற்றிவிட்டால் வட கிழக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புலி இயக்க உறுப்பினர்களின் மனோ நிலையில் ஒரு பெரும்பாதிப்பு ஏற்படும். இதனால் ஒரு இராணுவ இயக்கத்திற்கு தேவையான மனோஉறுதி (Morale ) குலைந்துவிடும்.

ஆ. புலிக்கெதிரான ஏனைய இயக்கங்கள் யாழ்ப்பாணத்தின் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்படும்போது (Unlea shedஎன்கிற பதம் பயன் படுத்தப்பட்டது) புலிகள் இலகுவாக இனங்காணப்பட்டு அழிக்கப்படுவார்கள். இதன் காரணமாக 1987 யூலைக்கு முன்பிருந்த நிலை மீண்டும் ஏற்படுவதை இம்முறை தடுக்கலாம். ஓரிரு கெரில்லாத் தாக்குதல்களைத் தவிர புலிகளால் குடாநாட்டினுள் வேறொன்றும் செய்ய முடியாத அளவிற்கு ஏனைய இயக்கங்கள் மக்கள் மத்தியில் பரவி விடுவர். தமிழ் நாட்டிற்குப் புலிகள் செல்ல முடியாமல் உள்ளமை இதற்கு இன்னும் சாதகமாக அமையும்.

இ. புலிகள் இயக்கத்தில் சேருவோரின் வயதெல்லை துரிதமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. தற்போது சேருபவர்கள் பெரும்பாலும் சிறுவர், சிறுமியரே. புலிகளின் விசா முறை யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றுவதோடு நீக்கப்படுமானால் இச்சிறுவர் சிறுமியரின் பெற்றோர் அவர்களை குடா நாட்டை விட்டு வெளியே கொண்டு போய்விடுவர். எனவே புலிகளின் ஆட் பலத்தில் மாபெரும் வீழ்ச்சி ஏற்படும். மேலும் புலிகள் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்த பின்னர் தமது போர் பிரசாரத்தையும், வீரப்பாடல்களை ஒலிபரப்புவதையும் கைவிட வேண்டி வரும். இதனால் தமிழ் ஈழப் போராட்டத்தில் மக்களுக்கு நாட்டம் குறைந்துவிடும்.

இங்ஙனமாகப் பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் கூறுகின்ற கருத்துக்கள் யாவும் புலிகள் இனி 1987க்கு முற்பட்ட ஒரு நிலைக்குத் திரும்பமுடியாது என்பதை அடிப்படையாகக் கொண்டவை யாகும். இன்னொரு முக்கியமான கருத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது பிரபாகரன் இன்று ராஜீவ் கொலை வழக்கில் முக்கியமான குற்றவாளியாகக் காணப் பட்டுள்ளதால், பிரபாகரன், இனி என்றும் அரசியல் அந்தஸ்துப் பெற முடியாது. ஆகவே பிரபாகரன் புலிகளின் தலைவராக இருக்கும்வரை புலிகள் அரசியல் அங்கீகாரம், அதிகாரம் பெற்று ஒரு நிலைக்கு வருதல் என்பது முடியாத காரியம். சாதாரண புலிகள் போராடுவது, என்றோ ஒரு நாள் தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வரலாம் என்பதற்காகத்தான். ஆகவே பிரபாகரன் தமக்குத் தலைவராய் இருக்கும் வரை தமக்கு எந்த எதிர்காலமுமில்லை என உணரத் தலைப்படும் போது பிரபாகரனுக்குக் கீழ் உள்ளவர்கள் தங்கள் தலைவரைக் கொன்றுவிடுவார்கள் அல்லது இச்சிக்கலை உணரும் பிரபாகரன் தானே சயனைட்டை உட்கொண்டு 'குளோஸ்' ஆகிவிடலாம். (மேற்கண்ட கருத்தை கூறும் ஒருவர் சில சிங்கள சோதிடர்களும்- பிரபாகரன் இந்த வருட முடிவிற்குள் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்று ஆரூடம் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை)

யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவது பற்றி மேற்கண்ட கருத்துக்களை பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் சிங்கள பௌத்த இனவாத அமைப்புகளுக்கும் தெரிவிக்கிறார்கள். இன்று இராணுவம் பிரேமாவுடன் கொண்டுள்ள தொடர்பைவிட பௌத்த பீடங்களுடன் கொண்டுள்ள உறவு மிக நெருக்கமாக உள்ளது.(அண்மையில் இராணுவத் தலைமைப்பீடம் சிங்கள பாதுகாவற் பேரணித் தலைவருக்கு சம்பந்தியாகி உள்ளது புறக்கணித்து விடக்கூடிய ஒரு விடயமல்ல) இராணுவத்திற்கும், பௌத்த பீடங்களுக்கும் (குறிப்பாக மல்வத்தை) சிங்கள பௌத்த அமைப்புகளுக்கும் இடையில் உருவாகியுள்ள இறுக்கமான உறவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தீவிர முயற்சியில் கொழும்பில் உள்ள இந்திய அதிகாரிகள் இறங்கி யுள்ளனர். இந்தியா இன்று ஏற்படுத்தியும், பலப்படுத்தியும் வரும் இந்தப் புதிய உறவு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பெரும் குந்தகமாக அமையலாம் என்பதைப்பற்றி டெல்லி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்திய அரசு அதிகாரிகள் இலங்கை அரசிற்கும், புலிகளுக்கும் இடையில் ஒரு யுத்தநிறுத்தம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றனர். புலிகளுக்கும் பிரேமாவிற்கும் எதிர்பாராத உறவு ஏற்பட்டு விடாமற் தடுப்பதற்குத் தனக்கு இருக்கும் ஒரேவழி இராணு வத்திற்கும் சிங்கள பௌத்த வாதிகளுக்கும் உள்ள உறவை தனக்குச் சாதகமாகப்பயன்படுத்திக் கொள்வதேயாகும என இந்தியா கணக்குப்போடுகிறது. இதனால் தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றியும் தமிழரின் உயிர்பாதுகாப்புப் பற்றியும் இந்தியா மூச்சுவிட விரும்பவில்லை. தமிழர் எதிர்காலத்தைப் பற்றி முன்பு மாதந்தவறாமல் அறிக்கை விட்ட டெல்லி இன்று அதைப்பற்றி மௌனம் சாதிப்பதன் மூலம் சிங்கள பௌத்த வாதிகளையும், இராணுவத்தையும் தன்பக்கம் கவர்ந்தெடுத்து இலங்கை அரசியலில் தனக்குச் சாதகமாகக் காய் நகர்த்த முற்படுவது முக்கியமான ஒரு திருப்பமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையத்தைக் கைப்பற்றுவதனால் குறைந்தபட்சம் பத்தாயிரம் பொதுமக்களாவது கொல்லப் படலாம் எனவும் இதற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்தால் தமது குடாநாட்டுப் பிரவேசம் பின்னடையலாம் எனவும் இராணுவத் தலைமைப்பீடம் சிலமாதங்களுக்கு முன்னர் (யாழ்ப்பாண 'அடி'க்கான தயாரிப்புகள் ஆரம்பமான வேளையில் ) கவலை கொண்டிருந்தது.

இதன்காரணமாக இராணுவத் தளபதிகள் சில தூதர்கள் மூலம் இந்திய அதிகாரிகளின் கருத்தறியும் முயற்சியில் இறங்கினர். இந்த தூதர்களிடம் இந்தியா சூசகமாகத் தெரிவித்தது என்ன? குடாநாட்டில் பொதுமக்கள் உயிரிழப்பைப் பற்றி நாங்கள் குரல் எழுப்பப் போவதில்லை என்றும், யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதற்கான மறைமுகமான அனைத்து உதவிகளும் செய்யலாம் என்றும் இந்தியத் தரப்பிலிருந்து எடுத்துரைக்கப் பட்டது. இதன் காரணமாகத் தான் இன்று குடாநாட்டில் பொதுமக்கள் பத்தாயிரம் என்ன, ஒரு லட்சம் அழித்தொழிக்கப் பட்டாலும் காரியத்தை முடிக்கலாம் என இராணுவம் நம்பிக்கை பெற்றுள்ளது. தமிழ் இன அழிப்பிற்கு எதிராக உலகில் எழக்கூடிய ஆட்சேபக் குரலையோ அனுதாபக் குரலையோ, இந்தியா அமுக்கிவிடும் என்கிற நம்பிக்கையை இன்று இராணுவம், பௌத்த பீடம், பேரினவாத இயக்கங்கள் ஆகியவற்றின் மத்தியில் டெல்லி ஏற்படுத்தியுள்ளது. சிங்கள முரட்டுப் பேரினவாதம் இன்று கட்டற்றுப் பீறிட்டெழும் காரணம் இதுதான்.

குடாநாட்டில் நடைபெறக் கூடிய ஒரு இனப்படுகொலையை உலக அரங்கில் மூடிமறைப்பதற்கு இந்தியாவிற்குச் சாதகமாக இன்று புலிகளின் சில நடவடிக்கைகள் அமைந்துள்ளன. புலிகள் ஏனைய இயக்கங்களைக் கொன்றொழிப்பதே தம் நோக்கம் எனப் பிரகடனப் படுத்துவதும், முஸ்லீம்களை கொலை செய்தும், இருப்பிடங்களைவிட்டு விரட்டி யடிப்பதும், சர்வதேச அரங்கில் தமிழ் இனப் படுகொலைக்கு எதிராகக் குரல் எழுப்பும் நடுநிலை அமைப்புகளுக்கும் , நாடுகளுக்கும் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன. தமிழர் மத்தியில் உருவாகக்கூடிய, தமக்கு கண்மூடித்தனமாகத் துதிபடாத அனைத்து சக்திகளையும் கொன்றொழிக்க வேண்டுமெனப் புலிகள் வெளிப்படையாகவே கூறித் திரிவது தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்தையே நசுக்கிவிடக்கூடிய சாதகமான சூழ்நிலையை இந்தியாவிற்கு உருவாக்கிக்கொடுத்துள்ளது.

வீரியமாகவும், தனித்துவமாகவும் இயங்கக்கூடிய தமிழ்த்தேசிய உணர்வு தன் ஒருமைப்பாட்டிற்கு 1916ம் ஆண்டிலிருந்து (தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்- திராவிட இயக்கத்தின் முன்னோடி தொடங்கப்பட்ட வருடம்) பெரும் ஆபத்தாக இருந்துவருகிறது என்பதை மனதில் கொண்டே டெல்லி செயல்படுகிறது. இதன் காரணமாகவே இந்தியா இன்று சிங்களப் பேரினவாதத்தோடு கைகோர்த்தேனும் தமிழ்த் தேசியத்தைக் காயடித்து விடலாம் என எண்ணுகிறது.

பிரேமதாசா இன்று தோன்றி யுள்ள சர்வதேச சூழ்நிலையில் தனது ஆட்சியைப் பலப்படுத்து முகமாக ஜன நாயகப்படுத்தல் வேலைகளில் இறங்கி, பத்திரிகைச் சுதந்திரம், ஆட்கடத்தல் பற்றிய விசாரணைக் கமிஷன் நியமனம், அரசியற் கொலைகள், கடத்தல்கள ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட பொலீஸ் இராணுவ விஷேட பிரிவுகளை கலைத்தமை ஆகிய காரியங்களைத் துரிதமாகச் செய்து அல்லது செய்வதுபோல் காட்டிச் செயல் படுவது கண்கூடு. இதேவேளை புலிகள் சர்வதேசச் சூழலை உணராமல் இயங்குவதும், தாம் கேட்கவிரும்பும் கருத்துக்களை மட்டுமே துதிபாடிகளின் மூலம் கேட்பதும், தமிழர் தேசிய உரிமைப் போராட்டத்தை கூண்டோடு கைலாசம் அனுப்பக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கிறது என்பதைப் புலிகள் உணரவில்லை. எனவே இந்தியாவின் ஆசீர் வாதத்தோடு நிகழப்போகும் குடாநாட்டின் மையத்தை நோக்கிய இராணுவத் தாக்குதலையும் அங்கு பொதுமக்கள் அழிவையும் உலக சமூகம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறது. புலிகள் நசுக்கப்படவேண்டிய ஒரு பயங்கரவாத இயக்கம். அவர்கள் ஒரு இராணுவ இயக்கமல்ல என்றும் அவர்கள் இன்றும் ஏனைய இயக்கங்களை நசுக்கும் தனிநபர் கொலைகள், முஸ்லீம்களுக்கு எதிரான இனஅழிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுவதால் அவர்கள் ஒரு சமூக விரோதக் கும்பல் என்றும் ஆகவே தமிழர் பெருவாரியாக அழிந் தொழிந்தாலும் புலிகள் அழிக்கப்படவேண்டும் என டெல்லி சர்வதேச சமூகத்தினர் மத்தியில் பிரச்சாரம் செய்கிறது. புலிகள் சில ஜனநாயகப் பண்புகளையேனும் வெளிப் படுத்தும் வரை இந்தியாவின் இப்பிரச்சாரத்தை தம் நாடுகளால் எதிர்க்கவோ, குடாநாட்டில் நிகழக்கூடிய இனப்படு கொலையைத் தடுக்கும் வகையில் குரல் எழுப்பவோ முடியா திருப்பதாக கொழும்பில் உள்ள சில மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

இயக்கங்கள் அழிந்தபின் மீண்டும் தாமே அரசோச்சலாம் என கொழும்பில் தமது குளிரூட்டப்பட்ட காரியாலயங்களில் இருந்துகொண்டு கனாக்காணும் கூட்டணி வக்கீல்களும் அவர்களது கையாட்களும் ஒணறைக் கவனிக்கத் தவறுகின்றனர். இந்தியாவும் சிங்கள இராணுவமும், பௌத்த பீடங்களும், சிங்கள இனவாதக்குழுக்களும் இன்று தம்மிடையே ஏற்படுத்தியுள்ள கூட்டு யாழ்ப்பாணம் வீழ்ந்த பின்னர் தமிழ்த்தேசியத்துக்கே குழிதோண்ட முற்படும் என்பதே அது.

பெரியாரும், அண்ணாவும், தந்தை செல்வாவும், இயக்கங்களின் ஆரம்பகால இலட்சியங்களும் கட்டிவளர்த்த பகுத்தறிவு வாதத்தையும் , தமிழ்த் தேசிய பண்பாட்டையும், உரிமைப்போரையும் இந்திய உபகண்டத்தின் தென் கோடியிலிருந்து அழித்தொழிக்க இந்தியா செய்யும் சதிகளை யாழ்குடாநாட்டில் நிகழப்போகும் பாரிய உயிரழிவின் பின்னராவது தமிழர் உணர்ந்து கொள்வார்களா?

நன்றி - நூலகத்திட்டம்



# விரட்டப்படுகிற அகதிகள்

**- சஞ்ஜித்**



தமிழ் நாடு அகதி முகாம்களிலும் வெளியிலுமாக இந்தியாவில் இருந்த 230,000 அகதிகளை கொஞ்சம் கொஞ்சமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையின் முதல் கட்டமாக ஜனவரி 20ம் திகதி 614 அகதிகளை ஏற்றிக் கொண்டு இந்தியக்கப்பலான எம். வி. அக்பர் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. இதைத் தொடர்ந்து இன்று வரை 2500 அகதிகளுக்கு மேல் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அரசு, இந்திய அரசு மற்றும் இலங்கை இந்தியப்பத்திரிகைகள் தெரிவிப்பதற்கு மாறாக, இந்த அகதிகள் தமது சுயவிருப்பத்துக்கு மாறாகவோ, அல்லது இலங்கைதிரும்புவது தவிர வேறு வழியில்லை என்ற முடிவு எடுக்கும் படிக்கு நிர்ப்பந்திக்கப்பட்டோ இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படையாக இப்போது தெரியவந்துள்ளது. புலிகள் என்று குற்றம் சாட்டி தமிழ் நாட்டின் சிறைகளில் அடைப்போம் என்று இந்திய அதிகாரிகள் மிரட்டியே அவர்களை வெளியேற்றியுள்ளார்கள். என்று திருகோணமலையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரியப்படுத்தியுள்ளன.

இலங்கை இந்திய அரசுகளின் இந்த கூட்டான நடவடிக்கையானது, சர்வதேச ரீதியில் கிழக்கில் சுமுக நிலை நிலவுவதாகவும், மக்கள் திரும்பியதற்கான சாத்தியப்பாடு உள்ளது எனவும் பிரச்சாரிப்பதற்கான ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே என்பதனை இந்தச் சம்வங்களைக் தொடர்ந்து கவனிப்பவர்கள் அறிந்து கொள்வர்.

ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோரி அடைக்கலம் புகுந்துள்ள அகதிகளைப்போல் அல்லாது இந்தியா சென்ற அகதிகள் உண்மையிலேயே மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகிய, யுத்தத்தின் உக்கிரத்தின் சகிக்க முடியாமையினால் வெளியேறிய வாழ்க்கைத் தரத்தில் கீழ்ப்பட்ட பகுதியினை சேர்ந்தவர்கள் ஆவர். மன்னார், மாதகல், மற்றும் குருநகர் பகுதிகளின் ஊடாக உயிரை வெறுத்து ஓடிப்போனவர்களே இவர்களில் பெரும்பான்மையினர் ஆவர். நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தால் வீடிழந்து சொத்து இழந்து உறவுகளையிழந்தது போட்டது போட்டபடியே இருக்க உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு ஓடியவர்கள் இவர்கள். ஐரோப்பிய நாடுகளில் ஒப்பீட்டளவில் வசதியாக (மிக வசதியா என்றும் சொல்லலாம்) வசிக்கின்ற அகதிகளைப்போல் அல்லாது இவர்கள் இந்திய அதிகாரிகளின் மிரட்டல் சுரண்டல் மற்றும் பிற வகையாக துன்புறுத்தல்களுக்கு மத்தியில் மாட்டுத்தொழுவங்களை விட மோசமான முகாம்களில் தவித்தவர்கள்.

1990 யூனில் இலங்கை அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் மீளத்தொடங்கிய யுத்தத்தின் பின் இது வரை 7,50,000 பேர்வரை இடம் பெயர்ந்தும் அகதிகளாகியும் உள்ளனர் என்ற யதார்த்த நிலை இன்னமும் நீடித்துக் கொண்டிருக்கையில் தான் இந்த கொலையை சாதகமாகப் பயன்படுத்தி தமது சட்டங்களை இறுக்கிக் கொண்ட இந்தியா, மற்றும் தமிழ் நாட்டு அரசுகள் புலிகளையும் முழுத் தமிழ் அகதிகளையும் ஒன்றாக்கி தமது ஆத்திரத்தை தீர்த்துக் கொள்வது போல் நடந்து கொள்கின்றனர் என்பது மட்டுமே இதில் இருந்து ஒருவர் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றாகும். இந்திய "சமாதானப்படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஓர் ஆண்டிற்கு மேலாக யுத்தம் நடந்த போதும் அகதிகளை திருப்பி அனுப்ப முடியாத இந்திய அரசு இப்போது அவர்களை திருப்பி-அதுவும் பலவந்தமாக அனுப்புகின்றது என்றால் அதற்கு காரணம் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே அண்மைக்கால சார்க் மகாநாடோடொட்டி உருவாகிய "ஒருவருக்கொருவர் பரஸ்பரம் முதுகு சொறியும்" புரிந்துணர்வு காரணமாக ஏற்படுத்திக் கொண்ட எழுத்தில் வராத ஒப்பந்தமேயாகும்.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்திலேயே இருநாட்டுத் தலைவர்களும் நடாத்திய கடிதப் போக்கு வரத்தின் படி "நாடு கடத்தல்" விவகார முடிவு ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பின் இணைப்பாக வந்த 1987 யூலை 29ந் திகதி இடப்பட்ட இலங்கை ஜனாதிபதியினது இந்தியப்பிரதமருக்கான கடிதத்தில் மூன்றாவது பந்தியின் முதல் பகுதி இப்படிச் சொல்கிறது.

"பயங்கர வாத நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் பிரிவினை அல்லது பிரிந்து போதலை பிரசாரிக்கும் எல்லா இலங்கை, பிரசைகளும் இலஙகைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்".

ஆனால் இதன்படி இறுதி வரை, தாம் கொலைசெய்யப் படும்வரை ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபா உட்பட புலிகள் வரை யாரும் திருப்பி அனுப்பப்படவில்லை. இந்தியப் படை இங்கு "சமாதானத்தை" நிலைநாட்டிக் கொண்டிருந்த போதும் யாரும் திருப்பி அனுப்பப்படவில்லை. புலிகளும் பிரேமதாசா அரசும் பேச்சு வார்த்தை நடாத்திய 14 மாத கால இடைவெளியின் போதும் திருப்பி அனுப்பப்படவில்லை. ஆனால் இப்போது உக்கிரமான யுத்தம் வடக்கு, கிழக்கில் நடைபெறும் போது, அதுவும் குறிப்பாக திருகோணமலை மிகவும் ஆபத்தான சண்டைகள் நடக்கும் இடமாக இருக்கும் போது இவர்கள் திருப்பி அனுப்பப் படுகிறார்கள்.

இது சர்வதேசரீதியில் பரவியிருக்கும் தமிழ் அகதிகள் அனைவரையும் நாடுகடத்துவதற்காக முன்னோடியாக செய்யப்படும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாகும். ஜெர்மன், சுவீஸ் போன்ற நாடுகளில் ஏற்கனவே வளர்ந்துள்ள தமிழ் அகதி எதிர்ப்பு இன்று பிற நாடுகளிலும் தொற்றி வருகின்றது. உலக வங்கியையும், சர்வதேச நாணயநிதியத்தையும் நடாத்துகின்ற ஐரோப்பிய நாடுகள் நமது உள்ளூர்களில் எழுந்துவரும் எதிர்ப்புகளைச்சமாளிக்க அகதிகளைத் திருப்பி அனுப்புகின்ற சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்த முயன்று வருகின்றன. ஏற்கெனவே ஜெர்மனியில் இச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. மற்றைய நாடுகளிலும் இது வரவுள்ளது. இந்த நாடுகள் தமது நோக்கங்களை நடைமுறைப்படுத்த அவற்றிடம் கையேந்தி நிற்கும் இந்திய-இலங்கை அரசுகளை நிர்ப்பந்தித்து வருகின்றன. அந்த அடிப்படையிலேயே இந்தியாவில் இருந்து இப்போது அகதிகள் திருப்பி அனுப்பப் படுகின்றனர். அங்கிருந்து வந்த அகதிகளுடன் தொடர்பு கொண்ட எமது நிருபருக்கு கிடைத்த தகவல் இது:

→ பார்க்க பக்கம் 10



# ஈழத்திற்கு ஒரு இந்தியா காஷ்மீரத்திற்கு ஒரு பாகிஸ்தான்

**சிவராசன்**

சென்ற மாதம் காஷ்மீர் மக்களின் பிரதான விடுதலை இயக்கமான ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீரிலிருந்து ஜம்மு காஷ்மீரை நோக்கி பெரியதொரு மக்கள் அணிவகுப்பை நடாத்தியது. இதனை பாகிஸ்தான் ராணுவம் தாக்கியதோடு முன்னணிப் போராளிகளைக் கைது செய்தது. இதன் மூலம் பாகிஸ்தான் தன்னுடைய முகமூடியைக் கிழித்துள்ளது. தான் காஷ்மீரின் காவலன், ஜம்முகாஷ்மீரை மீட்டெடுக்கும் போர்வீரன் என உலகெலாம் மார் தட்டிய பாகிஸ்தான் இந்நடத்தையின் மூலம் உண்மை சொரூபத்தை மாற்றிஉள்ளது.

ஜம்மு காஷ்மீர் மக்கள் தமக்கென சுதந்திரமான ஒரு அரசை அமைப்பதைவிட தன்னுடைய தலைமைத்துவத்திற்குள் வந்துவிட வேண்டும் என்பதையே விரும்புகிறது. இதற்கேற்ற வகையிலேயே தன்னுடைய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தது. ஜம்மு - காஷ்மீர் விடுதலைக் குழுக்களுக்குள் பூசல்களை ஏவி விடுவதும் அதன் மூலம் அக்குழுக்களைத் தமது கைப்பொம்மைகளாக்குவதற்குமான வேலைகளை இதுவரை செய்துவந்தது.இதன் மூலம் ஜம்மு காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தை அம்மக்கள் தமது சொந்தக் கரங்களில் நின்று போராடும் நிலையை அழித்து பாகிஸ்தானின் தயவில் தங்கி நிற்கின்ற நிலையை உருவாக்கியது. நாட்டுடன் இணைக்கப்படவேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நோக்கத்திற்கு ஜம்மு-காஷ்மீர் விடுதலைமுன்னணி இணங்கிவராததால் அதனை விடுத்து மத அடிப்படைவாத இயக்கமான 'ஹிஸ்புல்லா முஜாஹிதீனி'ன் இயக்கத்தை வளர்ப்பதில் ஈடுபட்டு வருகின்றது. ஆப்கானிஸ்தான் கெரில்லாக்களின் ஆதரவு பெற்ற இவ்வியக்கம் ஈரானிய இஸ்லாமியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. இவ்வியக்கம் ஜம்மு காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதையே விரும்புகின்றது. பாகிஸ்தான் அரசு இவ்வியக்கத்திற்கு ஆயுத, பணஉதவிகளைச் செய்து ஜம்மு-காஷ்மீர் வி.முன்னணியை நசுக்குவதற்கு இதை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றது.

ஜம்மு-காஷ்மீர் வி.முன்னணியின் தலைவர் அமானுல்லாக்கான் "இந்தியா டுடேக்கு" அளித்த பேட்டியில் "சுதந்திர காஷ்மீர்" என்ற எமது வழியை பாகிஸ்தான் நிராகரித்துதற்போது எமக்கு எதிராக இயங்குகின்றது என்றும் அதனால் தமக்கு ஆயுதம் கிடைப்பது சுலபமான விடயம் இல்லை என்றும் கூறினார்.

காஷ்மீர் விடுதலைக்காக போராடும் குழுக்கள் ஒன்றை உணர்ந்துகொள்ளவேண்டும். அதாவது காஷ்மீர் மக்களின் விடுதலையை பாகிஸ்தானோ இந்தியாவோ ஒருபோதும் பெற்றுத்தரப் போவதில்லை. அதனை காஷ்மீர் மக்களே போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். சொந்தப் பலத்திலேயே நடாத்தப்பட வேண்டும். இதற்கு ஈழத்தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு பாடமாக அமையட்டும். ஈழப்போராட்டத்தை இந்தியாவின் தயவில் நடாத்தியதால் முடிவில் இந்தியாவே தனது படையைக் கொண்டு ஈழமக்களை அழிக்கும் நிலைக்கு கொண்டுசென்றது. இவ்வகையில் ஜம்மு-காஷ்மீர் வி. முன்னணியினரின் அணிவகுப்பு பாகிஸ்தான் படைகளால் நசுக்கப்பட்டமையும் ஈழப் போராட்டத்தில் இந்தியா எடுத்த நடவடிக்கைகளுக்கு ஒப்பானதே.



- அமரதல்லகள்

தன்னுடைய இன் நடவடிக்கைகளுக்கு இணங்காத விடுதலைக் குழுக்களுக்கு உதவியை நிறுத்தியும் மிரட்டியும் பணிய வைக்க முயற்சித்தனர். இந் நடவடிக்கைகளுள் கடந்த மாதம் நடைபெற்ற போராட்டமும் ஒரு வகையில் பாகிஸ்தானை அம்பலப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட போராட்டம் எனலாம். இப் போராட்டம் பாகிஸ்தானின் ஆதிக்கத்திற்குள் விழ விரும்பாத ஜம்மு- காஷ்மீர் விடுதலை முன்னணியினால் நடாத்தப்பட்ட போராட்டம் என்பது குறிப்பிடத் தக்கது.

ஜம்மு-காஷ்மீர் விடுதலைக்காக முதன்முதல் தோன்றிய அமைப்பான ஜம்மு- காஷ்மீர் விடுதலை முன்னணி ஆரம்பம் முதல் இன்றுவரை காஷ்மீர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேராது தனியாகவே இருக்கவேண்டும் என்பதை விரும்புகின்றது. காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை காஷ்மீர் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதையே அது கொள்கையாக கொண்டுள்ளது. கிழக்கு பாகிஸ்தானிய மக்களை ஏற்கனவே பாகிஸ்தான் ஒடுக்கியதை தன் அனுபவ ரீதியாக அது உணர்ந்துள்ளது. ஆனால் பாகிஸ்தானை பொறுத்தவரை காஷ்மீர் தனது


முஸ்லீம்கள் என்பதற்காக பாகிஸ்தானுடன் இணைவது காஷ்மீர் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது. ஏற்கனவே முஸ்லீம் மக்கள் என்பதற்காக கிழக்குப் பாகிஸ்தான், பாகிஸ்தானுடன் இணைந்து பாகிஸ்தான் என்ற அரசு உருவானது. அது கிழக்குப் பாகிஸ்தான் மக்களை மிகமோசமாக ஒடுக்குகின்றது. தேசிய இன ஒடுக்குமுறையாக பாகிஸ்தானின் ஒடுக்குமுறை காணப்பட்டது. எனவே இந்நிலை காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைவதால் ஏற்படமாட்டாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை.

நன்றி - நூலகத்திட்டம்

படிந்த அத்தியாயமாகும். தமிழ் மக்களின் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்திய ஒரு நிகழ்வாகும். இந்த நிகழ்வுகளுடன் பெருந்தொகையான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்படவும் புலிகள் பலவிடங்களில் இராணுவரீதியில் பலமாக செயற்பட முடியாத நிலைமை ஏற்படவும் வழிவகுத்தது

1990 யூனில்யுத்தம் தொடங்கும் நாள்வரையில் தமிழ் முஸ்லிம் மக்களின், தலைமை தாமே என்று பிரகடனப் படுத்தியவர்கள், யுத்தம் ஆரம்பித்ததற்கு காரணமே தமது செய்தி வெளியான போது கிழக்கில் உள்ள பல முஸ்லிம் வெகுசன அமைப்புக்களும் இலங்கையில் பல பகுதிகளில் உள்ள மதத்தலைவர்களின் அமைப்புக்களும் இதனை வரவேற்று அறிக்கைகள் விடுத்ததும் கவனிக்கத்தக்கது.

தொடர்ந்து பேச்சு வார்த்தைகளின் மூலம் முஸ்லிம்கள் தமது பாதுகாப்பு தொடர்பாக நியாயமான அச்சங்களை வெளிப்படுத்தினர். இதனால் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களினுள் அமைக்கப்படும் தனியான முஸ்லிம் மாகாணத்திற்கு. தமிழ் கொழும்பின் பாரம்பரிய தலைமையை சேர்ந்த இவர் முஸ்லிம் மக்களை தேர்தலில் பிரதிநிதித்துவப் படுத்துபவர் அல்ல. சிங்கள மக்களையும், சிங்கள கட்சிகளையும் திருப்தி படுத்த இவர் இப்படியாக நடந்து கொண்டார். ஆனால் அடுத்து நிகழ்ந்தவை இவரது முன்னெடுப்பை குப்பைத் தொட்டிக்கே அனுப்பி வைத்து விட்டது. பெரும்பான்மை சிங்கள அரசியற்கட்சிகளை நம்பியே பிழைப்பு நடத்தும் இவரது நடவடிக்கைகள் புரிந்து கொள்ளத் தக்கதே. ஆனால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ரெலோ அமைப்பின் எம்.பி.




ஐரோப்பாவிற்குப் புலம் பெயர்ந்துள்ள தமிழர்களிடமிருந்து இன்னொரு சஞ்சிகை : உயிர்ப்பு. இது லண்டனிலிருந்து வெளியாகிறது. முதலாவது இதழை மாசி 92 இல் தந்திருக்கிறது உயிர்ப்ப "யுத்தத்தின் தீவிரத்தில் ஒரு இளம் தலைமுறையே தமது யுத்த நோக்கம் பற்றிய உணர்வேயின்றி பீரங்கிக்குத் தீனியாகிக் கொண்டிருக்கிறது" என்ற ஆழ்ந்த கவலையுடன், இந்தப் பலவீனமான சூழலிலிருந்து வெளியேறுவதற்கான முயற்சியில் உங்களையும் பங்கேற்குமாறு கோருகிறது உயிர்ப்பு.

உயிர்ப்பு முதலாவது இதழில் முஸ்லிம் மக்கள் தொடர்பாக வெளியான கட்டுரை ஒன்று இங்கு நன்றியுடன் மறுபிரசுரமாகிறது.

முகவரி ;

UYIRPPU
BM BOX 4002
LONDON
WC IN 3XX

# முஸ்லிம்களுக்கெதிரான தமிழ் இனவாதம்

து. கிறிஸ்தோபர்

அண்மையில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகள் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினையில் குறிப்பிடத்தக்கவை.

1) வடமாகாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டமை.
2) சர்வகட்சி மகாநாட்டில் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துள் முஸ்லிம் மக்களுடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கான பேச்சு வார்த்தைகள்.

முஸ்லிம்கள் சிறுபான்மை சமூகம் என்ற வகையில் பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டே வந்துள்ளார்கள். தமிழைத் தமது தாய் மொழியாகக் கொண்ட இவர்கள் கிழக்கு மாகாணத்தில் ஓரளவு செறிவாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற போதிலும் தம்மைத் தனித்துவமானவர்களாகவே இனம் காணுகிறார்கள். சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக போராடும் தமிழர் அமைப்புக்கள் பேரினவாதத்தை முகம் கொடுக்கும் இன்னோர் சமூமான முஸ்லிம் மக்களையும் தமது போராட்டங்களுடன் இணைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் காட்டும் ஆர்வம் புரிந்து கொள்ளக்கூடியதே. எனினும் இந்த இணைப்பானது முஸ்லிம் மக்களது தனித்துவத்தை அங்கீகரித்து இரண்டு சமூகங்களுக்குமே பொதுவான பிரச்சினைகளை இனங்கண்டு அந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றிய புரிதலுக்கூடாகத்தான் ஏற்பட முடியுமே அன்றி வேறு முறைகளால் அல்ல.

கடந்த காலத்தில் பல்வேறு தமிழர் அமைப்புக்களும் முஸ்லிம் மக்களைத் தமது போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதில் அக்கறை காட்டிய போதிலும் அதனை ஒரு அரசியல் ரீதியான இணக்கத்தினூடாக அல்லாமல் 'தமிழ் பேசும் மக்கள்', 'இஸ்லாமியத் தமிழர்', 'ஈழவர்' என்பவை போன்ற விஞ்ஞான பூர்வமல்லாத, கறாரானதாக அல்லாத பதங்களை, குறியீடுகளைப் பாவித்து முஸ்லிம் மக்களை தமிழ் மக்களுடன் இணைத்துக் கொள்ள செயற்கையான முறைகளில் முயன்றன.

இந்த அணுகு முறையும் முஸ்லிம் மக்கள் தமது தனித்துவத்தை இழக்கக்கூடிய ஆபத்தாக உணரவும் ஏற்கனவே தமிழ் மக்கள் மீது கொண்டிருந்த சந்தேக உணர்வுகளை பலப் படுத்தவுமே செய்தன. முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழ் மக்களது போராட்டங்களுக்கு கணிசமான தார்மீக ஆதரவு இருந்த போதிலும் அந்த மக்களை தமது போராட்டங்களுடன் பெருமளவில் இணைத்துக் கொள்வதில் தமிழ் அமைப்புக்கள் கண்ட தோல்விக்கு இந்த அணுகு முறையே பிரதான காரணமாகும்.

ஏனைய அமைப்புக்களை அழித்தொழிப்பதன் மூலம் தமிழ் மக்கள் மீது தமது ஏகபோக தலைமையை நிறுவிக் கொண்ட புலிகள் முஸ்லிம் மக்களது தலைமையையும் இதே வழிமுறையில் கைப்பற்ற முனைந்தனர். முஸ்லிம் மக்களது ஜனநாயக அமைப்புக்களையும் கூட தடை செய்தனர். அதன் முன்னணி அங்கத்தவர்களை வேட்டையாடினர். புலிகளின் இந்த செயற்பாடானது இந்த முரண்பாட்டினுள் அரசபடைகள் தலையிடவும் முஸ்லிம் மக்களின் ஒரு பகுதியினரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக பயன் படுத்திக் கொள்ளவும் வழியமைத்தது. இந்த நிலையில் புலிகள் காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளைப் புரிந்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இது ஒரு கறை ஆதரவாளரான ஒரு முஸ்லிம் தையற்காரரை மட்டக்களப்பு பொலிஸார் தாக்கியதே என்று காரணம் கூறியவர்கள் யுத்தம் ஆரம்பித்து ஒரு சில மாதங்களுள் வடமாகாணத்தில் உள்ள முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றினர். யாராவது ஒருசில முஸ்லிம்கள் அரச படைக்கு உதவியிருக்கலாம். அதற்காக முழு முஸ்லிம் சமூகத்தையும் வெளியேற்றுவதென்றால் அதற்கு அர்த்தம் என்ன ? இன்று பல தமிழர் அமைப்புக்கள் சிறிலங்கா இராணுவத்துடன் நேரடியாக இணைந்து செயற்படும் நிலையில் என்ன செய்யப்போகிறார்கள். முழுத் தமிழரையும் வெளியேற்ற முடியுமா ? இந்தியப் படைகளின் தாக்குதலின் போது கிழக்கு மாகாணத்தில் புலிகளை அழிக்காமல் காப்பாற்றியதில் முஸ்லிம் மக்களுக்கு பெரும் பங்குண்டு என்பதை இங்கு மறைக்க விரும்புகிறார்கள். முஸ்லிம் மக்களை வடக்கில் இருந்து வெளியேற்றிய சம்பவமானது தரும் செய்தி இது தான். அதாவது முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான சமூகம் என்பதை புலிகள் அங்கீகரித்து அதனை ஒடுக்க முனைந்திருக்கிறார்கள் என்பதே. கொழும்பில் சர்வகட்சி மகாநாட்டில் தமிழர், முஸ்லிம் அமைப்புக்களிடையே வடக்கு கிழக்கு அதிகார பரவலாக்கம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போதே முஸ்லிம் மக்கள் வடமாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டது நடைபெற்றது. அப்படியிருப்பினும் முஸ்லிம் அமைப்புக்கள் எதுவுமே வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இணைப்புக்கு எதிராக செயற்பட முனையாதது கவனிக்கத்தக்கது. அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பினுள் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க உடன்பாடு காணப்பட்டுள்ளதாக மாகாணத்திற்கு சமமான அதிகாரத்தைக் கோரினர். தமிழ், முஸ்லிம் மாகாண சபைகளை இணைந்த இணைப்புச் சபைக்கு அல்லாமல் நேரடியாக முஸ்லிம் மாகாணசபைக்கே முஸ்லிம் மக்கள் தொடர்பாக பல விடயங்களையும் கையாளும் அதிகாரம் தேவையென வலியுறுத்தினர். இந்தக் கோரிக்கைக்கு தமிழர் அமைப்புக்கள் இணங்க மறுத்த நிலையில் முஸ்லிம் அமைப்புக்கள் வடக்கு - கிழக்கு மாகாண அமைப்புக்கு எதிராக இல்லாத நிலையிலும் அதேவேளை தனியாக முஸ்லிம் மாகாணசபை நேரடியாக மத்திய அரசின் அதிகாரத்தை பெறுவதற்குமான கோரிக்கையை வலியுறுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த சம்பவங்கள் தெளிவு படுத்துவது யாதெனில், தேசிய இனப்பிரச்சினைக்கு முதலாளித்துவ அமைப்பினிலுள்ள தீர்வு முரணற்ற ஜனநாயகமே, முரணற்ற ஜனநாயகத்தை வழங்க தயாராக இல்லாத தமிழர் அமைப்புக்கள் முஸ்லிம் மக்களை தமது கோரிக்கைகளை இன்னும் வலியுறுத்தவும் தமிழரிடம் இருந்து பிரிந்து செல்லவுமே வழிவகுப்பார்கள். தமிழ் தேசியமானது கடந்தகாலத்தில் தமிழ் இனவாதமாகவே முன்னெடுக்கப் பட்டது என்றோர் விமர்சனத்தை பலரும் முன்வைப்பதுண்டு. புலிகளின் நடவடிக்கைகள் மட்டுமல்ல புலிகளைக் கண்டிக்கும் ஜனநாயக அமைப்புக்கள் என்பவையும் இந்த இனவாதத்தைக் கடந்து வரவில்லை என்பதன் அறிகுறியே இதுவாகும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக உடன்பாடு காணப் பட்டதாக செய்தி வெளியான போது அதற்கெதிராக குரல் கொடுத்த முஸ்லிம் தலைவர் எம். எச். முகமது மட்டுமே. திவ்வியநாதனும் இந்த கிழக்கு மாகாண விடுதலை முன்னணியில் அங்கம் வகிப்பதை என்ன என்பதாம்; சினிமாவிலும், கதைகளிலும் மட்டுமல்ல யதார்த்த வாழ்விலும் அரசியலிலும் கூட சில கோமாளிப் பாத்திரங்கள் வருவது தான் வரலாற்று விதி போலும்.

கடந்த காலத்தில் தமிழ் அமைப்புகளுக்கிடையே முஸ்லிம் மக்கள் பற்றிய பிரச்சினை விவாதத்திற்கு வந்தவுடன் அவர்கள் செய்யும் முதல் வேலை இது தான். அதாவது தேசிய இனங்கள் தொடர்பாக ஸ்டாலின் முன்வைத்த நாலு வரையறைகளையும் எடுத்துக் காட்டி அவை முஸ்லிம் மக்களுக்கு பொருந்தி வராததால் அவர்கள் தனித்தேசிய இனமாக மாட்டார்கள் என்றும் முஸ்லிம்கள் தனித் தேசிய இனம் இல்லையாதலால் அவர்கள் தமிழ்த் தேசிய இனமே என்றும் சாதிப்பார்கள். சற்று ஆழமாகப் பரிசீலித்தால் இந்த வாதத்தில் பல குறைபாடுகள் இருப்பது தெளிவாகும். ஸ்டாலின் இந்த வரையறையை முதலாளித்துவ அரசு இயங்குவதற்கு சாதகமான அம்சங்கள் என்ற அடிப்படையிலேயே முன்வைத்தார்.

அப்போது முதலாளித்துவ வர்க்கம் முற்போக்கான பாத்திரத்தை ஆற்றியது. இன்று ஏகாதிபத்திய கால கட்டத்தில் குறைவிருத்தி நாடுகளில் பேரினவாதம் சிறுபான்மை இனங்களை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடுகையில் இந்த வரையறையை வலியுறுத்துவதானது சிறுபான்மை இனங்களின் ஒழிப்புக்கு துணைபோவதாகவே அமையும். சற்று நுணுக்கமாக பார்த்தால் தமிழ் தேசிய இனத்திற்கே இந்த வரையறைகள் பொருந்தமாட்டா. இன்று இதன் குறைபாடும்


→ யுத்தம் 11 ல்

நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமே அல்ல - நளின்

**கலாநிதி நளின் டி சில்வா கொழும்பு பல்கலைக்கழக கணிதத்துறை விரிவுரையாளர். எண்பதுகளில் எழுச்சி கொண்ட "ஜாதிக சிந்தனய" (தேசிய சிந்தனை) என்கிற பௌத்த சிங்களத்தேசியவாதக்கோட்பாட்டின் பிதாமகர்களில் ஒருவர். அண்மையில் இந்த ஜாதிக சிந்தனய பற்றிய விவாதங்கள் பிரபல சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் முக்கியத்துவத்துடன் வெளியிடப் பட்டுள்ளன. தொண்டமானின் யோசனைக்கு எதிராக எழுந்துள்ள சிங்கள இனவாதப் புயலை 'ஜாதிக சிந்தனய' இயக்கத்தின் கருத்துக்களே ஆக்கிரமித்துள்ளன. எனவே இந்த "ஜாதிக சிந்தனய" கோட்பாட்டினைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துமுகமாக கலாநிதி நளின் டி சில்வாவுடன் ஓர் நேர்காணலை மேற்கொண்டோம். அதனை இங்கே தருகிறோம்.**



-கலாநிதி நளின் டி சில்வா

**இன்று நாட்டிலே உள்ள பிரச்சினையை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துகின்றீர்கள்? இது ஒரு இனப்பிரச்சினை என்பீர்களா அல்லது வேறு என்பீர்களா?**

அடிப்படையில் இனப்பிரச்சினையென்று திரிபுபடுத்தப்பட்டுள்ள ஒரு பொருளாதாரப் பிரச்சினையே இதுவாகும். இதை நான் விரிவாகவும் தெளிவாகவும் கூற விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை, எனும் போது அனேகருடைய கருத்தும் இதுவே என கூற வேண்டும். தமிழர் இந்நாட்டில் ஆயிரம் வருடங்களாக தொடர்புற்று இருந்திருக்கலாம். ஆனால் **தமிழ்த் தேசியம் என்பது (Tamil national concinyners) கடந்த நூற்றாண்டுகளிலேயே உருவானது. அதற்கு முன் நாம் சரித்திரத்தை நோக்குவோமானால் இந்நாட்டில் ஒரு இனம் தான் (Only one nation) இருந்தது. அது சிங்களவர்தான்.** இந்நாட்டிற்கு அக்காலங்களில் வந்த பல்வேறு இனத்தவர் அடிப்படையில் வியாபாரிகளாக அல்லது கல்வியை நாடியவர்களாக அல்லது படையெடுப்பாளர்களாக வந்தவர்களே.

வியாபாரிகளாகவும், கல்விமான்களாகவும் வந்தவர்கள் அனேகமாக திரும்பிச் செல்வார்கள். யாராவது திரும்பிப்போகாமல் இங்கேயே தங்கியிருந்தால் ஓர், இரு தலைமுறைகளுக்குள் அவர்கள் சிங்கள இனத்துள் உள்வாங்கப்பட்டிருப்பார்கள். குறிப்பாக தென் இந்தியாவில்இருந்து வரலாற்றில் தொடர்ச்சியான இடப்பெயர்ச்சிகள் நடைபெற்றிருந்தாலும் அவர்களுக்கு ஒரு கலாசார தொடர்ச்சி இருக்கவில்லை. அதாவது அங்கு ஒரு தமிழ் தேசிய உணர்வு இருக்கவில்லை. அண்மைக்கால வரலாற்றை எடுத்துக்கொண்டாலும் "பிரிட்டிஷ்" காலத்தில் தான் தமிழ் தேசியம் உருவாகின்றது.

**இன்று விடுதலைப் புலிகள், கூட்டணி உட்பட அனைத்து இயக்கங்களும் திம்புவில் முன் வைக்கப்பட்ட மூன்று அடிப்படைகளையுமே தமது கோரிக்கைகளுக்கு மையமாக கொண்டுள்ளன. அவை, தமிழர் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுதல், சுயநிர்ணய உரிமை, வட கிழக்கு தமிழரின் பாரம்பரியப் பிரதேசம். இதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

சிங்கள மக்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இடதுசாரிகளும் அரசாங்கமும் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். சிங்கள மக்கள் என்று கூறும்போது கட்சிகளை எடுத்துக் கொண்டால் ஸ்ரீ.ல.சு.க ஆனது தொண்டமானின் யோசனைகள் முன்வைக்கப்பட்டபோது, சில காலம் மௌனம் சாதித்தது. ஆனால் அதனுள் இருந்து இன்று "ஹெல உரிமய" இயக்கம் தோன்றி இவ்வாறான யோசனைகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றது. இவர்கள் ஸ்ரீ.ல.சு. கட்சியினுள் கணிசமான தொகையினர், ஐ.தே.கவை எடுத்துக்கொண்டால் அது ஒரு தனிமனித நாடகம்.( One Man Show) ஆதலால் தெளிவாக எதுவும் கூறமுடியாது. ஏனெனில் அங்கு கருத்துத் தெரிவிக்க தயக்கம் காணப்படுகின்றது. எனினும் பிரதேச சபைகள், மாகாண சபைகள் போன்றவற்றில் உள்ள ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மறைமுகமாக இவ்வாறான யோசனைகளை நிராகரிக்கின்றார்கள். பொதுவாக சிங்கள மக்கள் இந்த அடிப்படைகளை (திம்பு) ஏன் மறுக்கிறார்கள் என்பதை நான் விளக்கவேண்டும். சிங்களவரைப் பொறுத்தவரையில் தமிழ் இனம் (Tamil Nation) என்பது ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு விடயம் ஆகும். வட, கிழக்கு மாகாணங்களும் இக்காலத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்டவையே ( Arbitrary) நிருவாக வசதியை நோக்கமாகக்கொண்டே வட, கிழக்கு உருவாக்கப்பட்டது. ஆகவே பாரம்பரிய பிரதேசம் ஒரு செயற்கையான உருவாக்கம் தான். **இது தொடர்பான இரண்டாவது விடயம் தமிழர்கள் ஒரு காலத்தில் கிழக்கு மாகாணத்தில் வாழவில்லை** என்பதாகும். இலங்கை 1815 இல் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்தபோது கிழக்கு மாகாணம் "றுகுணு" பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1848 இல் "வெல்லஸ்ச" கிளர்ச்சியின் பின், அங்கும் கிழக்கு மாகாணத்தின் பிற பகுதியிலும் இருந்த சிங்கள மக்களை ஆங்கிலேயர்கள் படுகொலை செய்தார்கள். எனக்கு பின்வரும் விடயம் பற்றி தெரியாது; ஆனால் 1850 க்குப் பின் யாரோ ஒருவர்– பெயர் ஞாபகம் வரவில்லை– பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தமிழரை கிழக்கில் குடியமர்த்துவதற்கு அனுமதி பெற்றதாக சிலர் கூறுகின்றார்கள். **இதை நான் சரியாக உர்ஜிதம் செய்ய முடியாமல் இருக்கின்றது.**

**மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நகரங்களிலும் கிழக்கின் மூன்று மாவட்டங்களில் பொதுவாகவும் சிங்களவர் வெளியேற்றப்பட்டு 1850 இன் பின் அங்கு தமிழர்கள் குடியேற்றப் பட்டார்கள் என்று நீங்கள் கூறுகின்றீர்களா?**

ஆம்,ஆம் 1848 க்கும் 1911க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில்தான் கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு தமிழரின் எண்ணிக்கை கூடியது. சிங்கள சனத்தொகை வீழ்ச்சியடைந்தது. கிழக்கைப் பொறுத்தவரை இதுதான் நிலைப்பாடு. எனவேதான் சிங்கள மக்களில் 90%க்கு மேலானவர்கள் வட, கிழக்கு தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் வடக்கைப் பொறுத்தவரை நிலைப்பாடு வேறாக உள்ளது.

அங்கு தமிழர் சொல்வதில் நியாயம் இருக்கின்றது என்ற கருத்து உள்ளது. வடக்கின் சில பகுதியை ஒரு அலகாக அங்கீகரிக்கக்கூடிய தன்மையுள்ளது.

**வடக்கின் சில பகுதிகளை தமிழர்களின் ஒரு பிரதேச அலகாக (Unit ) கருதலாம் எனும்போது எந்த இடங்களை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?**

–சிலரைப் பொறுத்தவரையில் வவுனியாவக்கு அப்பால்..........

**குறிப்பாக யார் என்று கூற முடியுமா?**

–சில சிங்கள மக்கள் கூறுவதுபோல......

**அவர்கள் யார் என்று கூற முடியுமா?**

–சில சிங்கள இயக்கங்கள், சிங்கள பாதுகாவல் பேரணி அல்ல. அவர்கள் இன்னும் இந்த பிரச்சினையை சரியாக அணுகவில்லை.

**அப்படியாயின் "ஹெலஉரிமய"?**

–ஆம், ஆம்.... நிச்சயமாக இரணைமடுவிற்கு அப்பால்தான் தமிழர் வாழும் பிரதேசம் ஒன்றை ஏற்றுக்கொள்ளலாம். முன்பு இரணைமடுவில் குடியேறுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது அங்கு தமிழ் மக்கள் எவரும் குடியேற முன்வரவில்லை. சிங்களவர்கள் தான் அங்கு குடியேறவேண்டியதாயிற்று. வடக்குத் தமிழர் தமது பிரேதசமாக இரணைமடுப் பகுதியை அந்தக்காலகட்டத்தில் கருதவில்லை என்பதையே அது காட்டுகின்றது. அங்கு சிங்களவர்கள் குடியேறினார்கள் அவர்கள் 1958 இன் பின் மறைந்துவிட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது, அது வேறு பெரும் பிரச்சினை.

**ஆகவே வடக்கில் தமிழருக்கு அதிகாரப் பரவலாக்கல் (Devolution) வழங்கப்படுவதற்கான பிரதேசம் இரணைமடுவிற்கு வடக்கே உள்ளது என்கிறீர்களா?**

–ஆம் இரணைமடுவிற்கு அப்பால். மேலும் இன்னொரு முக்கியமான விடயம் இருக்கின்றது. இது குறிப்பாக சிங்கள பாதுகாப்புப் பேரணியால் முன் வைக்கப்பட்டுள்ளது. இதன்படி அதிகாரப் பரவலாக்கல் என்பது இன அடிப்படையில் இருக்கக்கூடாது. அது பொருளாதார புவியியல் அடிப்படையில் அமையலாம். இதில் அவர்கள் பிடிவாதமாக இருக்கின்றார்கள்.

**நீங்கள் கிழக்கு மாகாணம் தமிழருடைய பாரம்பரிய பிரதேசம் அல்ல என்பதற்கு ஒரு வரலாற்றுக் காரணத்தை முன்வைத்தீர்கள். அதாவது ஆங்கிலேயரால் அங்கு வாழ்ந்த சிங்களவர் கொலை செய்யப்பட்டு தமிழர்கள் குடியேற்றப்பட்டமை - அதேபோல வடக்கும் தமிழருடைய பாரம்பரிய பிரேதசம் இல்லை என்று நீங்கள் கூறுவதற்கு என்ன வரலாற்றுக் காரணங்களை முன்வைக்கின்றீர்கள்?**

வடக்கும் கிழக்கைப்போல தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசம் இல்லை என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. போர்த்துக்கீசர் வந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் பொருளாதார அடித்தளம் என்று ஒன்று இருக்கவில்லை. அதாவது நிரந்தர குடியிருப்புக்களின் அடித்தளமான நெற்செய்கை அங்கு இருக்கவில்லை. போர்த்துக்கேயரால்தான் புகையிலைச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள சூத்திரக் கிணறுகள், துலாக்கிணறுகள் ஆகியவை இதன் பின்புதான் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் பின் ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையில் அரசியல் சட்டவாக்கத்திற்கென ஆங்கிலேயர் அரசால் அனுப்பப்பட்ட கோல்புரூக் என்பவர் யாழ்ப்பாண கலக்ரரை சந்தித்தபோது குடாநாட்டில் எந்தவித நிரந்தரக் குடியிருப்புமில்லை; விவசாயமுமில்லை என அவருக்கு (கோல்புரூக்) தெரிவிக்கப்பட்டது. அங்கு மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்களே ஒழிய நிரந்தரமாக இருக்கவில்லை. இந்தியாவிலிருந்து வந்துபோய்க் கொண்டிருந்த வந்தேறு குடிகளே (Migratery population ) அங்கு காணப்பட்டனர். இவ்வாறுதான் தமிழ்ச் சமூகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது. (Created )

**இதற்கான ஆதாரங்கள் எங்கு கண்டெடுத்தீர்கள்?**

**"கோல்புருக்" கமரோன் அறிக்கையில் இதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றது. ஆனால் இந்த ஆவணங்களை நான் நேரடியாக காணவில்லை. மேலும் ஓர் இனத்திற்கென்று பாரம்பரிய பிரதேசம் கொடுக்கப்படுவது சிங்களவர்க்கும், முஸ்லிம்களுக்கும், எதிரான தமிழ் இனவாதமாக (Tamil Racism ) கருதப்படும்.**

நன்றி - நூலகத்திட்டம்



# தெரிவுக்குழு தீர்வைத்தராது - காமினி

முன்னாள் அமைச்சரும் தற்போதைய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர்களில் ஒருவருமான காமினி திசாநாயக்காவை நேர்காணச் சென்றிருந்தோம், நானும் எனது நண்பரும். அவருடைய இல்லத்தின் பிரமாண்டமான வாயிற்கதவுகளில் எதுவித சிரமமுமின்றி அனுமதி கிடைத்தது. நேர்த்தியானதும் அழகானதுமான மிக நீண்ட வேறால். ஐம்பதுக்கு மேற்பட்டோர் உட்கார்ந்து பேசக்கூடிய மிக நீண்ட மேசை. மேசையின் ஒரு புறத்தே அமர்ந்திருந்த காமினி திசாநாயக்கா அவர்கள் எம்மைக் கண்டதும் நெருக்கமான புன்னகையுடன் வரவேற்றார் ஆங்கிலத்தில். சரிநிகர் என்கிற தமிழ்ப் பத்திரிகைக்காக நேர்காணச் சென்றிருப்பதாகக் கூறியதும் மிக ஆர்வத்துடனும் அக்கறையுடனும் தமது கருத்துக்களைக் கூறினார். "யார் இந்நாட்டைஆள விரும்பினாலும் சிறுபான்மையினரைப் பகைத்துக் கொண்டு ஆட்சி செய்ய முடியாது. தேர்தலில் வெற்றி பெறுவதானால் சிறுபான்மையினரின் வாக்குளைப் பெற்றேயாக வேண்டும்" எனக் கூறிய அவர் எமது கேள்விகளுக்கான தனது அபிப்பிராயங்களைக் கூறியுள்ளார். அவற்றைக் கீழே தருகிறோம்.

**இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமான் சில யோசனைகளை முன் வைத்துள்ளார். அவை தொடர்பான உங்களது அபிப்பிராயம் என்ன? அவற்றை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

1) என்னால் தொண்டமானுடைய யோசனைகளை ஏற்றுக்கொள்வது கடினமாயுள்ளது. ஏனெனில் அவரே தன்னுடைய 50 ஆண்டுகால நினைவு நூலில் (பக்கம் 214 என நினைக்கிறேன்) இல-இந் ஒப்பந்தமும் அது கொடுக்கிற அதிகாரப் பரவலாக்கலுமே தமிழருக்குக் கிடைத்த மிகச் சிறந்த தீர்வென்று கூறியுள்ளார். இக்காலகட்டத்தில் தமிழரோ அல்லது ந்தச் சிறுபான்மையினரோ இதை விடக் கூடுதலாக எதிர்பார்ப்பது அபத்தமானது. இல-இந் ஒப்பந்தத்தின் கீழ் அரசியலமைப்பு ரீதியாகவே தமிழ் மக்கள், தமிழ் மொழி ஆகியன ஒரு பல்லின சமூகத்தின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலோட்டமாகச் சொல்லக் கூடிய தென்னவென்றால் ஒப்பந்தத்தின் அடிப்படைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்றைய ஜனாதிபதியும் ஒப்பந்தத்தை எதிர்த்தவர்களும் இது நடைமுறைப்படுத்தப் படாததற்குக் காரணமானவர்கள். தமிழ் அரசியலுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. புலிகள் மிதவாத தமிழ் தலைமைகளுக்கு எந்தச் சந்தர்ப்பத்தையும் வழங்கவில்லை. புலிகள் அரசினுடைய விருந்தினர்களாக கொழும்பில் இருக்கும் போது தமிழ் அரசியல்வாதிகள் கொல்லப்பட்டார்கள். அமிரையும், யோகேசையும் புலிகள் கொல்லவில்லை என பாராளுமன்றத்தில் சொன்னார்கள். பின்னர் புலிகளே கொன்றார்கள் என்றும் சொன்னார்கள்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இந்நாட்டில் ஒன்றாக வாழ வேண்டும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். தொண்டமான் மிகச் சரியாகச் சுட்டிக்காட்டி இருப்பதுபோல எமது 2500 வருட வரலாற்றில் முதல்முறையாக எம்முடைய சமூகத்தின் பல்லின,பல்மத, பல்சமூகத் தன்மை அரசியல் யாப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் பலப்படுத்த வேண்டும். இது என்னுடைய கருத்து.

**2.திம்புப் பேச்சின் போது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அனைத்துத் தமிழ் அமைப்புக்களாலும் நான்கு அடிப்படை யோசனைகள் முன்வைக்கப் பட்டன. அவற்றை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அல்லது இல்லையா அது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

2) நான்காவது அடிப்படை இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. என்று நான் நினைக்கிறேன். மலையக மக்கள் இன்று இலங்கையின் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அது ஒரு சரியான பாதையின் வரவேற்கத்தக்க முடிவு.

மற்றவற்றைப் பொறுத்தவரை நான் அறிந்த மட்டில் அவை திம்புப் பேச்சு வார்த்தைக்கான ஒரு நிலைப்பாடாக (NEGEOTIATING POSITION) முன்வைக்கப்பட்டதேயொழிய அவற்றோடு நாம் உடன்படுகிறோமா இல்லையா என்று கேட்பது பொருத்தமானதல்ல. அண்மையில் அன்ரன் பாலசிங்கம் தாம் ஒரு சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வோமெனக் கூறி இருந்தார். அங்கே சுயநிர்ணய உரிமை என்ற பேச்சு எழவில்லை. எனவே எமக்கு இன்று தேவைப்படுவது ஒரு நல்ல அதிகாரப் பரவலாக்கம். மாநில சுயாட்சி அமைப்பு முறையே என்னைப் பொருத்தவரை பொருத்தமானது. இல-இந் ஒப்பந்தம் அதனை வழங்குகிறது.

வரதராஜப் பெருமாள் இவ்வாறான ஒரு நிலைமையை உருவாக்கி இருக்கலாம். அவர் முதலமைச்சராகத் தொடர்ந்திருந்தால் தன்னுடைய மாகாண அரசை நடாத்துவதன் மூலம் அனுபவத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால் அதெல்லாம் இடையில் குழம்பவேண்டியதாயிற்று. ஆகவே இத்திம்பு அடிப்படைகள் இன்று வரலாற்று விடயங்களாகி விட்டன. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை கூட இன்று இந்த அடிப்படைகள் ஒரு யதார்த்தபூர்வமான அடிப்படைகளாக இல்லை.

**3. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் முக்கியமான ஒருவர் நீங்கள் எனக் கூறப்படுகிறது. தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இவ்வொப் பந்தத்தையே நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தியா கூறுகின்றது. தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இல-இந் ஒப்பந்தம் எவ்வளவுக்குப் போதுமானது என நீங்கள் கூறுவீர்கள்?**

இல-இந் ஒப்பந்தம் பற்றி நான் இதைக்கூற விரும்புகிறேன். வேறு யார் அதைப்பற்றி என்ன கூறி இருந்தாலும் நான் நேர்மையாக நம்புகிறேன்; நாங்கள் தமிழ் மக்களின் சுய கௌரவத்திற்கும் மதிப்பிற்கும் இடமளிக்கும் வகையில் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். எதைக். கொடுப்பதற்கும் தயார் இல்லாதிருந்த சிங்கள அரசியல்வாதிகள் பலர் நான் எனது புதைகுழியை நோக்கிப்போய்க் கொண்டிருக்கிறேன் என்று, நான் ஜே.ஆர் ஜெயவர்தனா அவர்களின் இல-இந் ஒப்பந்தம் கைச்சாத்திடும் முயற்சியை ஆதரித்தபோது கூறினார்கள் நானே முன்னின்று இல-இந். ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட சில விடயங்களை தொடங்கி வைத்தபோது அவர்கள் இவ்வாறு கூறினார்கள் தமிழரோடு கூடிவாழும் ஒரு ஐக்கிய இலங்கை இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் நான் இதைச் செய்தேன்.

ஜனாதிபதியாயிருந்த ஜே.ஆர். தான் செய்வது சரியென நம்பினார். அண்மையில் நடந்த பத்திகையாளர் மாநாட்டில்கூட தன் வாழ்க்கையில் முக்கியமான ஒரு விடயமாக இல-இந் ஒப்பந்தத்தைக் கருதுவதாகக் கூறியுள்ளார். அவர் கூறியது சரியென நான் நினைக்கிறேன். யாருக்கும் இல-இந் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமா என்ற கேள்வி உருவாக வேண்டியதில்லை. **அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதே. சிங்கள மக்களோ அல்லது இந்நாட்டை ஆளும் அரசோ சிறுபான்மையினங்களுக்கு தனது நேர்மையைக் காட்டிக்கொள்ள வேண்டுமானால், அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.** அதில் சில விடயங்கள் திருப்தியற்றிருப்பின் அவற்றை மேலும் நாம் செழுமைப்படுத்தலாம். தமிழ் மக்கள் தரப்பிலும் இவ்வரசாட்சி ( இல-இந் ஒப்பந்தம்) முறைக்குள் வருவதற்கான ஊக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் 25 வருடங்களாக அவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். **ஸ்ரீ.ல.சு.கட்சி அதிகாரத்திலிருக்கும் போது ஐ.தே. கட்சியால் ஒதுக்கப்படும் நிலையும் செயலிழக்கும் நிலையும் உருவாகியது. ஐ.தே.கட்சி அதிகாரத்திலிருக்கும் போது அதே போல மாறி நடைபெறுகிறது.** இதே வழியில் தமிழர் அரசியல் நடாத்த முடியாமல் போகும் போது அவர்கள் ஒதுக்கப்படும் நிலை உருவாகிறது. ஜி.ஜி பொன்னம்பலம், திருச்செல்வம் ஆகியோரிற்குப் பிறகு தமிழர் அரசியல் கட்சி எதுவுமே அரசாங்கத்தில் இருக்கவில்லை.

வட்டுக்கோட்டை மாநாட்டிற்குப்பின் தமிழ் அரசியல் தீவிரவாதத்தை நோக்கி திரும்புகிற நிலை மேலோங்கியது. இந்நிலையை மாற்றவேண்டிய சூழ்நிலை ஒரு கட்டத்திலேற்பட்டது. அமிர் போன்றோர் தலையில் பிஸ்டல் வைக்கப்பட்ட நிலையிலேயே பேச வேண்டியதாயிற்று. இந்நிலையை மாற்றுவதற்கு அன்று இருந்தது ஒரேயொரு வழிதான். தீவிரவாதிகளும்சரி, கூட்டணியினரும்சரி தாம் இலங்கை அரசாங்கத்துடன் கதைக்கத் தயாரில்லை என்றும் இந்தியாவே தமது பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்றும் கூறி இருந்தார்கள். ஆகவே அதுவே (இந்திய மத்தியஸ்தம்) சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரே வழியாக இருந்தது. ஆகவே அவ்வழியிலேயே தீர்க்கப்பட்டது. விரும்பியோ விரும்பாமலோ பிரபாகரன் கூட இத்தீர்வுக்கு வரவேண்டியதாயிருந்தது.

பிரபாகரனுடைய முக்கியமான சுதுமலைப் பேச்சில்- நான் குறிப்பிட வேண்டும்; அது ஒரு மிக அழகான பேச்சு (அப்பேச்சின் பிரதியொன்று என்னிடமுள்ளது.)- **இந்தியா இதைச் செய்யச் சொல்கிறது. ஆகவே செய்கிறோம். ஆனால் நாம் சிங்களத் தலைவர்களையோ, 'சிங்கள அரசியல் வாதிகளையோ நம்பவில்லை"** என்று தமிழ் மக்களுக்குக் கூறினார். அப்படிக் கூறிய பிரபாகரன் எவ்வாறு பிரேமாவுடன் வந்து பேசினார்? ஆகவே அங்கே பிரபாகரனைப் பொறுத்தளவில் கூட ஒரு நம்பகத்தன்மை பற்றிய கேள்வி எழுகிறது. எனவே நாமோ இந்நாட்டை ஒன்றாகத் தக்க வைக்க வேண்டும் என்று நம்புகிறோம். என்னுடைய நெருங்கிய நண்பர்கள் தமிழர்கள். எனது பாடசாலை விடுதியில் கூட இரண்டு பக்கத்திலும், தமிழ் நண்பர்களே கூடப் படுப்பார்கள். **எனது மிக நெருங்கிய சகபாடிகள் தமிழர்கள். திரு செல்வநாயகம் அவர்களின் மகன் சந்திரகாசன் உட்பட.** நாம் அவ்வாறு தான் வளர்ந்தோம்.

**இக்கலாசாரப் பிளவு 1956இலேயே ஏற்பட்டது. ஒரு தேசம் ஏதோ ஒரு நிலையில் ஆரம்பமாக வேண்டும். அது உருவாவதற்கு தமிழ் மக்களுடையதும், சிங்கள மக்களுடையதும் உணர்வுகளுக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும். இவ்வாறு நான் கூறும்போது தமிழ் தீவிரவாதத்தையும் சிங்கள தீவிரவாதத்தையும் ஒதுக்கிவிட வேண்டும். நீண்டகாலமாக சிங்கள மக்கள் தமது அரசியலில் சிங்கள தீவிரவாதிகள் மேலாண்மை செலுத்துவதற்கும், தமிழ் மக்கள் நீண்டகாலமாக தமது அரசியலில் தமிழ் தீவிரவாதம் மேலாண்மை செலுத்துவதற்கும் அனுமதித்து விட்டார்கள். இந்நிலையில் இல-இந். ஒப்பந்தம் இருதரப்பு நடுநிலையாளர்களும் பிரயாணம் செய்யக்கூடிய ஒன்றாக அமைந்தது.**

நமது நாட்டில் சில அரசியல்வாதிகள் ஒப்பந்தத்தை நாசமாக்க முற்பட்டது முற்றிலும் தவறென்று நான் நினைக்கிறேன். இனத்துவேஷத்தையும் தமிழ் விரோத உணர்வுகளையும் தட்டி எழுப்பிவிட்ட ஸ்ரீ.ல.சு. கட்சி இன்று பாடம் கற்றுக்கொண்டு விட்டது. ஏனென்றால் ஒப்பந்தம் எங்கள் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்க நாம் (ஐ.தே.கட்சி) மாகாண சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் அனைத்திலும் வெற்றியீட்டினோம். **இதில் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் சிங்கள மக்கள் முன்னேறி விட்டார்கள். தமிழ் மக்களும் முன்னேறி விட்டார்கள். ஆனால் தமிழ் தீவிரவாதம் அவர்களைத் தடுக்கிறது.**

**4. காலம் காலமாக தீர்வுக்கான யோசனைகள் முன்வைக்கப் படுவதும் மாநாடுகள், கூட்டங்களுடன் அவை அடிபட்டுப் போவதும் வழக்கமாகி விட்டது. இவ்வகையில் தெரிவுக் குழுவுக்கு என்ன நடக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

### எதுவும் நடைபெறப் போவதில்லை

இப்பிரச்சினையைத் தீர்ப்பதென்றால் தலைவர்கள் சொல்ல வேண்டும். இப்பிரச்சினை பற்றிய எமது கருத்து இதுதான் என்று . அப்படித் தாம் நம்புவதை மக்கள் முன் வைக்கவேண்டும். தனது அதிகாரத்தையும், மக்கள் செல்வாக்கையும் பணயம் வைத்து அதைத்தான் நான் செய்வேன். ஒரு அரசியல் தலைவன் அப்பிரச்சினை குறித்துதான் ஒரு தீர்வை முன்வைக்காது அக்குழு அதற்கான தீர்வை ஆராயட்டும் என்றுகூறிவிட முடியாது. தன்னுடைய சொந்தக் கட்சிக்கே தான் தீர்வு எதுவெனச் சிந்திக்கிறேன் எனச் சொல்லாமல் ஒரு தலைவர் எவ்வாறு இப்படிச் செய்ய முடியும். இல-இந். ஒப்பந்தத்தின் போது ஜே.ஆரால் ஒரு தீர்வாக மந்திரி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இது பாராளுமன்றக் குழுவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்தான் இத்தீர்வை செயற்படுத்திக் காட்டுவதற்கான பலம் தனக்கிருப்பதாகக் கூறினார். இந்நிலையில் சர்வ கட்சி மாநாடுகள், பாராளுமன்றத் தெரிவுக்குழுக்கள் ஆகியன வெல்லாம் வெறும் வெற்றுச் செயற்பாடுகளே. ஏனெனில் இவ்விடங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால் ஏதாவது நடைபெற வேண்டுமானால்இந்நாட்டின் தலைவர் பெரும்பான்மை மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்வை முன்வைக்க வேண்டும். அதற்கு அவர் பெரும்பான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற வேண்டும். **ஆனால் இன்றுள்ள நிலைமையின் கீழ் பெரும்பான்மை இனம் பிளவுண்டு கிடக்கிறது. ஆகவே இந்தப்**

→ பார்க்க பக்கம் 9




- காமினி திசாநாயக்கா

நன்றி - நூலகத்திட்டம்



# புலம் பெயர்ந்தோர் இலக்கியம் - பார்வையும் பதிவும்



ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழர்கள் அது தொடர்பான சட்டங்களைத் தெரிந்து கொள்ளவும் வதந்திகளை நம்பிக் கொண்டிருந்தவர்கள் உண்மைச் செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், கூடவே செய்திகள் மட்டுமன்றி பயனுள்ள தகவல்களை அளிக்கும் நோக்குடனும் 88 ஜனவரியில் ஆரம்பமான தூண்டில் இது வரை 48 இதழ்களைத் தந்துள்ளது. இன்று இது தமிழ் மக்களது அரசியல் அக்கறையும் முன்னெடுப்பும் உள்ளவர்களிடையே முக்கியத்துவம் பெற்ற சஞ்சிகையாக மாறியுள்ளது.

இந்த மாற்றம், வளர்ச்சி திடீரென நிகழ்ந்த ஒன்றென்று கூறி விடுதல் இயலாது. தூண்டில் ஆரம்ப இதழ்களில் அதன் அரசியல் அக்கறை வெளிப் பட்டாலும் (உதாரணமாக ஒப்பந்தங்களும் ஒப்பாரிகளும், இந்திய ஆக்கிரமிப்பும் எமது போராட்டமும் ,மனிதன் எங்கே? போன்ற ஆசிரிய தலையங்கங்கள் பிரஜைகள் எழுதவாரம்பித்த தேசத்தின் குறிப்புகளுடன் தான் இம்மாற்றம் துல்லியமாக வெளிப்படத் தொடங்கியது.

இலங்கை பற்றிய உண்மைச் செய்திகளையும் அதன் பின்னணிகளையும் ஐரோப்பிய வாசகர்களுக்குக் கொடுக்கு முகமாக 24 வது இதழில் ஆரம்பிக்கப்பட்ட 'இன்றைய நிலைமைகள்' என்கிற பத்தி தான் பின்னைய தூண்டில்களில் விரிந்து தேசத்தின் குறிப்புகளானது என எண்ணுகிறேன்.

ஏன் நான் பிரஜைகள் குறிப்புடன் தான் இந்த மாற்றம் ஏற்பட்டது எனக் கூறுகிறேன் என்றால் ஆரம்பகால தூண்டில்களில் வெளியான- ஒரு ஜனரஞ்சக சஞ்சிகை எப்போது வேண்டுமானாலும் எத்தனை முறையும் பிரசுரிக்கக் கூடிய விடயங்களான உங்களுக்குத் தெரியுமா ? புகை பிடிப்பதை நிறுத்துவது எப்படி ? என்பன போன்ற விடயங்கள் ஒதுக்கப் பட்டு நூறு பூக்கள், பகுதியும் விவாதங்களும், இவை தொடர்பான வாசகர்களின் கடிதங்களும் வெளிவர ஆரம்பித்தது பிரஜைகள் எழுதவாரம்பித்த பின்னர் தான் என்பது எனது அபிப்பிராயம்.

இந்த தேசத்தின் குறிப்புகள் குறித்த கால அரசியற் சூழலின் குறிப்பான நிலைமைகள் தொடர்பான தனது அபிப்பிராயங்களை முன்வைக்கிறது. அவை தொடர்பான மாற்று அபிப்பிராயங்களையும், விவாதங்களையும் கோருகிறது.

'இவ்வகையில் தேசத்தின் குறிப்புகளில் பிரஜைகள் இதுகாலவரை தந்தவற்றை சாரப்படுத்தினால்

1. இந்தியப் படையின் வருகையுடன் மீளவும் ஒரு முறை தேக்கத்திற்குள்ளான தமிழ் மக்களது போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.
2. இன்று போராட்டத்திற்குத் தலைமையேற்கும், புலிகளது ஜனநாயக மறுப்பும், அவர்கள் கொண்டுள்ள பாசிசக் கூறுகளும் அரசியல் வழிமுறைகளுக்கு ஒரு போதும் விடுதலையைப் பெற்றுத் தரப் போவதில்லை.



3. இதற்கு மாறாக புலிகளுக்கெதிராக என்று கங்கணம் கட்டிக் கொண்டு இந்திய இலங்கை அரசுகளுடன் கை கோர்த்து நிற்கும் எந்தத் தமிழ் அமைப்புக்களாலும் எதுவும் ஆகப் போவதில்லை. தமிழ் மக்களது விடுதலைப் போர் ஒழித்துக் கட்டப்படுவதை தவிர.
4. ஆகவே அரசும், அரசு சார்ந்துள்ள தமிழ் அமைப்புக்களாலோ அல்லது புலிகளாலோ ஒரு போதும் தமிழ் மக்களது பிரச்சினைக்கான தீர்வொன்றைப் பெற்றுத் தந்து விடமுடியாது எனவே இவ்விரண்டும் தவிர்ந்த மூன்றாவது பாதை ஒன்று அவசியம். அதை இது தொடர்பாய் அக்கறையுள்ள எல்லோரும் சேர்ந்து உருவாக்க வேண்டும். அதற்கான விவாதங்களை, அபிப்பிராயங்களை பலரும் முன்வைக்க வேண்டும், என்று கேட்டுக் கொண்டே பிரஜைகள் தமது அபிப்பிராயங்களை முன்வைக்கிறார்.

இவ்வாறு பிரஜைகள் முன்வைத்த அபிப்பிராயங்களில் பலத்த சர்ச்சைக்குள்ளானது புலிகள் பற்றிய பிரஜைகளின் மதிப்பீடுகள்.

இது தவிர நூறு பூக்கள் பகுதியில் புலிகளது யுத்தம் தடுப்பு யுத்தமா? அழிவு அரசியலின் விபரீத விளைவா? ஐக்கிய முன்னணி பற்றி, ஐக்கிய இலங்கைக்கான போராட்டம் பற்றிய விவாதங்கள் இடம் பெற்றன. கூடவே இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். என்னவெனில் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான வாதங்களும் இரண்டோ மூன்று தூண்டில் வரை இழுபட்டிருந்தது என்பதையும்.

இவ்விவாதத்தில் பிரஜைகள் முன் வைத்த கருத்துக்களையும் அவை தொடர்பாய் எழுந்த மாற்று அபிப்பிராயங்கள் பற்றியும் அடுத்த இதழில் பார்ப்போம்.

## ரத்தினை...

பிரேமதாசவின் உத்தரவின் பேரில் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கிய இராணுவ அதிகாரி குறித்தவாறு முழு ஆயுதங்களையும் வழங்கவில்லை. இது தொடர்பாக பிரபாகரன் உடனடியாக பிரேமதாசவிடம் புகார் செய்தார். எனவே அந்த இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார்.

நெடுங்கேணிக் காட்டுக்குள் பிரபாகரன் இருக்கும் போது அவரது மனைவியையும், பிள்ளையையும் அரசு ஹெலிகொப்டரில் கொண்டு சென்று ஒப்படைத்தது பற்றிக் கேட்டபோது அதைப்பற்றிய விபரங்களையும் பிரபாகரன் வெளியிட்டுள்ளார்.

காட்டினுள் ஏழு அல்லது எட்டு மைல்களுக்கு மேல் தாம் நடந்துசென்று பிரபாகரனைச் சந்தித்ததாக இப்பேட்டியை 'மாத்ரு பூமி'க்காக எடுத்த பத்திரிகையாளர் கே.எஸ்.கே. குஷிம் ப்ரம் தெரிவித்துள்ளார். புலி அலையும் காட்டில் சில வினாடிகள் என்ற தலைப்பிடப்பட்ட இப்பேட்டி பிரபாகரன் துப்பாக்கியால் குறி வைத்தபடி இருக்கும் படத்துடன் வெளியாகியுள்ளது.

மாத்ரு பூமி ஒரு மலையாளப் பத்திரிகை. கேரளாவின் தலைநகரான திருவனந்தபுரத்திலிருந்து வெளியாகிறது. இலங்கையில் சில முக்கியமான நூலகங்களில் இருப்பதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. மலையாளம் தெரிந்தவர்கள் மாத்ரு பூமியில் இதனை வாசித்து அறியலாம். அல்லாவிடில் மாத்ரு பூமி காரியாலயத்துக்கு எழுதியும் பெறலாம்.

## தெரிவுக்குழு...

பார்ராளுமன்றத் தெரிவுக்குழுவூடாக எதுவுமே நடைபெறாது என்று நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

5.பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்தை அனேகமாகத் தமிழ்குழுக்கள் தமது அடிப்படைக் கோரிக்கையாக முன் வைக்கின்றன. அது பற்றி என்ன குறிப்பிடுகிறீர்கள்?

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நேரத்தில் சேருவில-கந்தளாய் பிரதம பௌத்த பீடாதிபதி என்னை வந்து சந்தித்தார். அவர் என்னுடன் மிகக் கோபமாக இருந்தார். ஏன் எனது பகுதியயெல்லாம் தமிழரின் பாரம்பரிய பிரதேசம் எனப்பட வேண்டும் என்று ஆத்திரப்பட்டார். நான் அந்த மதிப்பிற்குரிய பிக்குவிற்கு கூறினேன், நாம் மலையகத்தை தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்று கூறுவதில்லை. தென் மாகாணத்தை தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்று கூறுவதில்லை. சப்ரகமுவ மாகாணத்தைக் கூறுவதில்லை. நாம் விரும்புகிறோமா இல்லையோ வட-கிழக்கு தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசமாகத்தான் இருந்திருக்கிறது. நாம் ஏன் அதை ஒத்துக்கொள்ளக் கூடாது. நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். வடகிழக்கில் தமிழ் சிங்கள மற்றும் வேறு சிறுபான்மையினர் ஆகியோருக்கிடையான இனச்சமநிலையை Ethnic Balance) மாற்றுவதை நோக்காகக் கொண்ட பலவந்தமான குடியேற்றம் (forced colonisation ) நடைபெறுவதை நான் எனது வாழ்க்கையின் .இந்தக் கட்டத்தில் எதிர்க்கிறேன். இது இல-இந். ஒப்பந்தத்தின் இன்றியமையாத ஒரு அம்சமாகும். ஆனால் ஒரு பெரும்பான்மை இனத்தவர் வடகிழக்கில் குடியேறி வாழமுடியாது என்ற நிலைப்பாட்டை எடுக்க முடியாது. அதே போல பெரும்பான்மைச் சிங்கள மக்களும், தமிழ் மக்கள் சிங்களப் பகுதியில் நிலம் வாங்க முடியாதெனவோ, வாழ முடியாதெனவோ கூறமுடியாது.

டி.எஸ். சேனாநாயக்கா குடியேற்றம் தொடங்கிய காலகட்டத்தில் பெரும் தோட்டங்களின் வளர்ச்சி காரணமாக பெருந்தொகையான சிங்கள மக்களுக்கு காணியற்ற நிலை ஏற்பட்டது. அவர் இதற்கொரு தீர்வைக் காண இம்மக்களுக்கு காணி வழங்க முற்பட்டார். அந்நேரத்தில் தமிழ் மக்களுக்கு காணிப் பிரச்சினை என்பதே இருக்கவில்லை. 1956க்குப் பின்தான் இது ஒரு பிரச்சினையாக உள்ளது. அதைத்தான் தீவிரவாத சிங்கள இனவாத அரசியல் என்கிறேன். தமிழ் மக்களுக்கு நமது பிரதேசங்கள் வேறு இன மக்களால் நிரப்பப்படுவது பற்றி இருக்கும் பயத்தைப் புரிந்து கொள்கிறேன். இப்பிரச்சினைக்கு இல-இந்திய ஒப்பந்தம் ஒரு கௌரவமான தீர்வை வழங்குகிறது.

6. இன்று உருவாகியுள்ள சிங்கள பௌத்த இனவாத எழுச்சி தமிழ் மக்களுக்கு ஒரு பீதியை உண்டாக்கியுள்ளது. இது வட-கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கெதிராக வன்முறையைத் தூண்டி விடலாம்என்ற பயம்தோன்றியுள்ளது. சிங்கள இனவாதத்தின் எழுச்சி பற்றியும், மற்றும் சிங்கள பாதுகாப்பு பேரணி போன்ற குழுக்களின் எழுச்சி பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சிங்கள மக்கள் மத்தியில் தமது உரிமைகளைப் பற்றியும் தமது மதத்தைப் பற்றியும் எழுப்பப்படும் கோஷங்கள், ஜனநாயக ரீதியாக எழுப்பப்படும் வரை கவலைப்படத் தேவையில்லை. இது இன்று உலகில் காணப்படும் ஒரு பொதுவான போக்கு. நீண்ட காலத்தின் பின் மனிதன் தனது உண்மையான சமூக அடித்தளம் இனத்திலும், மதத்திலுமே இருக்கென்பதை உணர்ந்து வருவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை இது. செயற்கையான சமூகக் கூட்டமைப்புகள் தற்காலிகமானவையே என்பதை உணர்ந்துள்ளனர். இதனால் தான் முற்காலத்தில் இனங்கள் குழுக்களாக வாழ்ந்தன.

சிங்கள பௌத்த மக்களுக்கு ஒரு சிறுபான்மைத் தனமான மனோபாவம் இருக்கிறது. இது தென்னிந்தியாவில் பெருமளவில் தமிழ் திராவிட இனத்தவர் இருப்பது காரணமாக உருவாகியது. தமிழ் நாடும் வடபகுதித் தமிழரும் ஒன்றாகச் சேர்ந்து தமிழீழம் அமைத்து விடுவார்கள் என்ற பயம் அவர்களிடமுண்டு. இதனால் தான் இந்தியா தமிழ் கெரில்லாப் போரின் உச்சகட்டத்தில் கூட இலங்கையின் ஐக்கியத்தை மிகக் கடுமையாக வலியுறுத்தியது.

இன்று சிங்கள இனவாதக் குழுக்கள் தோன்றுவதற்கு ஒரு காரணம் உண்டு. அது என்னவெனில் தேசிய கட்சிகள் ஸ்ரீ.ல.சு.க, ஐ.தே.க, எமது கட்சி என்பன தாம் சிறுபான்மையினருடன் தேர்தல் சம்பந்தப்பட்ட வகையில் வேலை செய்தாக வேண்டும் என உணர்ந்துள்ளன. வடகிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் பத்து லட்சத்திற்கும் மேலான தமிழ் வாக்குகளைப் பெறவேண்டிய தேவையை தேசியக் கட்சிகள் உணர்ந்துள்ளன. முஸ்லிம் மக்களுக்குள்ளும் வேலைசெய்ய வேண்டியுள்ளது. ஆகவே இக்கட்சிகள் சிங்கள, பௌத்தம் என்று சொல்லக் கூடிய ஒரு கோட்பாட்டை முன்வைக்க விரும்பவில்லை. ஆகவே இந்த நிலையில் இதுபோன்ற சிறுகுழுக்கள் தோன்றி சிங்கள பௌத்த உரிமையைப் பேசமுற்பட்டுள்ளன. என்னைப் பொறுத்தவரை அவர்களுடைய கருத்துக்கள் வன்முறையூடாக வெளிப்படுத்தப்படுவதை விட ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தப்படுவது நல்லது. இந்நாட்டில் இனக்கலவரம் ஒன்று மூளுமானால் அது அரசினால் திட்டமிடப்பட்டதாகவே இருக்கும்.

7. பாஸ்கரலிங்கம் சில மலையக தொழிற்சங்கங்களுக்கு முன்வைத்த யோசனையில் தோட்டத் தொழிலாளரின் இருப்பிடங்களை கூட்டுரிமை ஆக்குவதற்கான ஒரு திட்டமும் முன்வைக்கப்பட்டிருந்தது. இது எந்தளவிற்கு நடைமுறைப் படுத்தபட முடியுமென நினைக்கிறீர்கள்? இந்த யோசனை மலையகத்திலுள்ள தமிழ்தொழிற்சங்கங்களால் கிராமங்கள் உருவாகுவதற்கும், அதன்மூலம் மலையக தமிழ் மக்களுக்கு அரசியலதிகாரமும் அந்தஸ்தும் கூடும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறமுடியும்?

இந்த யோசனைகளை நான் பார்க்கவில்லை. ஆனால் எது செய்யப்பட்டாலும் மலையகத்திலுள்ள சமூக பொருளாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டே செய்யப்பட வேண்டும். பாஸ்கரலிங்கம் திட்டங்களை வரையலாம். இன்று அவர் வரைகின்ற. திட்டங்களை அவரது சொந்த இடமான யாழ்ப்பாணத்தில் நடை முறைப்படுத்த முடியுமா? இந்தத் திட்டங்கள் செயற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் என்றால் மலையகச் சிங்களக் கிராமத்தின் பிரச்சினைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

8. புலிகளை முறியடிப்பது எந்தவொரு தீர்வையும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானது எனக் கருதுகிறீர்களா?

ஒரு கெரில்லாப் போராட்டத்தில் ஒரு ராணுவ வெற்றி பற்றியோ தோல்வி பற்றியோ பேச முடியாது. ஆனால் ஒரு விடயம் தெளிவாக இருக்க வேண்டும்; அதாவது இப்பிரச்சினைக்கு ஒரு இராணுவத் தீர்வு இல்லை என்பது புலிகளுக்கு உணரவைக்கப்பட வேண்டும்.

9. 'இம்பீச்மென்ற்' பிரச்சினை நடைபெற்ற காலகட்டத்தில் அரசாங்கமும், அதனைச் சார்ந்த தரப்பினரும் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டதற்கு நீங்களே காரணமெனக் குற்றம் சாட்டினார்கள். இதன் உண்மை என்ன?

யாழ் மக்கள் அது ஒரு பச்சைப் பொய் என்பதை அறிவார்கள். யாழ் மக்கள் என்னை என்றும் அது தொடர்பாகக் குற்றம் சாட்டியதில்லை. யாழ் நூலக எரிப்பிற்கு முன்னோடியாக நடந்த சில சம்பவங்கள் பற்றி நான் இன்றைய ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதை அவர் விளங்கிக் கொண்டாற் போல தெரியவில்லை. அதை அவர் தனது நலன் கருதி ஏற்றுக்கொள்ளவில்லை போலும். அதைச் செய்தவர்கள் இராணுவத்தினர் சிலர். நான் யாழ்குடாவிற் நூலகம் எரிக்கப்பட்ட பின்பே சென்றேன். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் எவ்வாறாயினும் நடைபெற வேண்டுமென அன்றைய ஜனாதிபதி கருதியதால் நான் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. அதைச் செய்த (யாழ்நூலகம் எரிக்க காரணமான) நபர் இன்று லேக் ஹவுஸ் இயக்குனர் பதவிக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

10. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உங்களது கட்சி ஏதாவது யோசனையை முன்வைக்கவுள்ளதா?

நாம் வட-கிழக்குப் போரை மிக்க கவலையுடன் அவதானித்துக் கொண்டுள்ளோம். தனிப்பட்ட முறையில் இல-இந்திய ஒப்பந்தமே சில கூடுதல் அதிகாரங்களுடன் சிறந்தது என நினைக்கிறேன். ஆயினும் எமது கட்சி பல தமிழ்க் குழுக்களுடனும் பேசி, சில மாதங்களின் பின்னர் ஒரு நிலைப்பாட்டை முன்வைக்கும். கிழக்கு மக்கள் வடக்குடன் இணைய நிர்ப்பந்திக்கக் கூடாது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# நம்பிக்கைகளையும் கனவுகளையும் வழங்கிய இலட்சியபூர்வமான சித்தாந்தத்தின் ஆத்மாவுக்கு என்ன நடந்தது?

## - அடூர் கோபாலகிருஷ்ணன்.

நான்கு முறை சிறந்த நெறியாள்கைக்கான தேசிய விருது பெற்ற அடூர் கோபால கிருஷ்ணன் கேரளவின் சிறிய நகரமான அடூரில் பிறந்தவர். கதகளிப் பாரம்பரியமுடைய கேரளவின் கலைக்குடும்பம் ஒன்றில் பிறந்த இவர் எட்டு வயதிலேயே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். காந்தி கிராம் பல்கலைக்கழகத்தில் படித்தபோது 20றகு அதிகமான குறிப்பிடத்தக்க நாடகங்களை தயாரித்த இவருக்கு 1965ல் இந்திய திரைப்பட தொலைக்காட்சிக் கல்லூரியில் கதை வசனம் எழுதுவதிலும் நெறியாள்கையிலும் பட்டப் படிப்புக்கான புலமைப் பரிசில் கிடைத்தது. கேரளாவின் திரைப்படத்துறைக்கு முன்னோடியாக இவர் அமைத்த 'சித்ரலேகா' நிறுவனமே-இந்தியாவின் முதல் திரைப்படக் கூட்டுத்தாபனமானது. 25க்குமதிகமான குறும்படங்களையும் விவரணங்களையும் தயாரித்துள்ளார் இவர். அவற்றுள் The myth (1967) பாரம்பரியம் (1988) என்பன குறிப்பிடத்தக்கன. அடூரின் முதலாவது திரைப்படம் சுயம்வரம் (1972) இது அவ்வாண்டின் சிறந்த நெறியாளர், சிறந்த படப்பிடிப்பாளர், சிறந்த நடிகை ஆகியவற்றிற்கான தேசிய விருதையும், கேரள மாநில சிறந்த திரைப்பட, சிறந்த படப்பிடிப்பு, சிறந்த இசை, சிறந்த கலை நெறியாள்கை ஆகியவற்றுக்கான விருதையும் பெற்றது. தொடர்ந்து கொடியேற்றம் (1977), எலிப்பத்தாயம் (1981), முகமுகம் (1984), அனந்தரம், மதிலுகள் ஆகிய படங்களைத் தயாரித்துள்ளார்.

விக்கிரம் சிங் சண்டே ஒப்ஸேவர் பத்திரிகைக்காக அடூர் கோபால கிருஷ்ணனைப் பேட்டி கண்டார்.

**சிங்; உங்களுடைய திரைப்படங்கள் கேரளாவின் இடதுசாரி அரசியலை ஒரேயடியாகத் தூக்கி வீசும் விமர்சனமாகவே இருக்கிறது என்று சிலர் கருதுவதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

அடூர்; அப்படித்தான் பல பேர் சொல்கிறார்கள். ஆனால் என்னுடைய படங்களை அரசியல் படங்கள் என நான் நினைக்கவில்லை. திரைப்படக்கலையின் தீவிரமான மாணவன் நான். எனவே என்னுடைய திரைப்படங்களை அரசியல் படங்கள் எனக் கூறத்துணிய மாட்டேன் புரிந்துகொள்ளல் மற்றும் அனுதாபத்துடன் கூடிய பார்வையையே என்னுடைய திரைப் படங்களைப் பார்ப்பவர்களிடம் நான் எதிர்பார்க்கிறேன். அடிப்படையில் மனித மனத்தை அதன் பல்வேறுபட்ட சிக்கல்கள் அழிவுகளுடன் புரிந்துகொள்ள முனைவதே என்னுடைய படங்களின் குறி.

**சிங்; உங்களுடைய மையக் கதாபாத்திரம் சிறீதரன் ஒரு வகையில் சூக்கும மானவன். எனினும் அவனுடைய இயல்புருவாக்கம் மற்றும் சிறீதரன் எப்படி அரசியல் மனிதனாக உருவாகினான் என்பது பற்றி நீங்கள் அதிகம் சொல்லவில்லை.**



அடூர்; அர்ப்பணிப்புணர்வுமிக்க ஒரு கொம்யூனிஸ்ட் கட்சி மனிதன் சிறீதரன் 1955 இற்கு முன்பு கட்சியில் இருந்தவன். நான் அவனைப் புரிந்துகொள்ள முயன்றிருக்கிறேன். படத்தில் ஒரு ஆலை உரிமையாளின் கொலையில் தொடர்புற்றிருந்தவன் சிறீதரன் என்ற மாதிரி சில தகவல்கள் வரும். அத் தகவல்களில் முரண்பாடுகளும் கூடவே இருக்கும். ஆனால் உண்மையை எப்படிப் பின்தொடர்வீர்கள்? அதுதான் கேள்வி எது உண்மை? விம்பமா? அல்லது யதார்த்தமா? அந்தப் பத்து வருடங்களிலும் (1955–1965) சிறீதரன் என்ன செய்தான் என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் தலைமறைவு வாழ்வின் பின் அவன் திரும்பி வந்தபிற்பாடு அவன் செய்கைகளை வைத்துக்கொண்டு அவன் என்ன செய்திருக்கக்கூடும் என்று புரிந்துகொள்ள முயற்சிக்கிறேன். என்னுடைய திரைப்படம் எழுப்பும் கேள்விகள் பாசாங்கு அற்றவை; சாதாரண மனிதரின் பார்வைக்கூடாக எழுப்பப்படுபவை. நம்பிக்கைகளையும் கனவுகளையும் எங்களுக்கு வழங்கிய இலட்சியபூர்வமான ஒரு சித்தாந்தத்தின் ஆத்மாவுக்கு என்ன நடந்தது? இதுதான் கேள்வி.

**சிங்; நடைமுறை அனுபவங்கள் , தனிப் பட்ட வாழ்க்கை போன்றவற்றில் படம் எவ்வளவுதூரம் தங்கியிருக்கிறது? உங்களுடைய எலிப்பத்தாயம் படம் இருந்ததுபோல?**

அடூர்; சிறீதரனைப் போல நூற்றுக் கணக்கானோரை நாங்கள் பார்க்கலாம். கொம்யூனிஸட் கட்சி 1964 இல் பிளவுற்றது. ஏனினும் அதற்கு முன்பே கட்சிக்குள் 'இழுபறி' இருந்துவந்துள்ளது. அந்தக்காலப்பகுதியில் நிறையக் கட்சி. உறுப்பினர்கள் கட்சிப் பிளவையும், சிக்கல்களையும் தாங்க முடியாமலும் புரிந்துகொள்ள முடியாமலும் குடிக்க ஆரம்பித்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

**சிங்; வயிற்று நோவுக்காக பிராண்டி குடிக்கும் சிறீதரன் ஏன் அதனை ரகசியமாகப் பேண விரும்புகிறான்?**

அடூர்; ஒரு காலத்தில் கட்சி உறுப்பினர்கள் கட்சியை கறைப்படுத்தும் எந்தக் காரியத்திலும் ஈடுபடாமல் மிகக் கவனமாக இருந்தார்கள். சாராயம், விபசாரம், பெண்களின் புறம் திரிதல் போன்ற 'தாரமிகப் பழுதான' எவற்றையுமே அவர்கள் மறுத்தார்கள். சிறீதரனும் அப்படித்தான். அந்தக்காலத்தில் கட்சிக்காக முற்று முழுதாகத் தங்களை அர்ப்பணித்தார்கள் தங்களுடைய உணவைக் கவனிக்க மாட்டார்கள். நாட்கணக்கில் பட்டினி கிடந்துள்ளார்கள். இதன் காரணமாக குடற்புண் போன்ற வயிற்று நோய்களை அவர்கள் சம்பாதித்துக்கொண்டார்கள். இது பற்றி நான் ஆய்வு செய்துள்ளேன் தலைமறைவு வாழ்க்கையே நியதியாக இருந்தமையால் மருத்துவரிடம் போகவும் அவர்களினால் முடிவதில்லை. நோவைத் தாங்குவதற்காக அவர்கள் குடிக்க ஆரம்பித்தார்கள். அந்த அம்சத்தைத்தான் ஒரு 'நிகழ்ச்சி மூலமாக' நான் பயன்படுத்தியிருக்கிறேன்.

இரண்டாவது தரம் வயிற்றுநோ சிறீதரனுக்கு ஏற்படுகிற போது அவன் பழைய, கட்சி நண்பரொருவரிடம் பேசிக் கொண்டிருக்கிறான். அந்த நண்பருடைய புகழுரைகள், கதை எல்லாவற்றையும் கேட்டுவிட்டு வெளியில் வருகிறபோது, ஒலிபெருக்கியில் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற குழுவினர்கள் சமகால அரசியல் பற்றித் தங்களுடைய வியாக்கியானங்களைச் சொல்வதைக் கேட்கிறான். அந்தக் கணம், சிறீதரனுடைய வயிற்று நோ ஆத்மத் தளத்திலும் ஒரு நோவாக எங்களில் படிகிறது. எனவே, இந்தப்படம் கொமியுனிஸ்ட் விரோத படம் என்று சொல்பவர் எவரும் படத்தை முற்றாகவே புரிந்துகொள்ள முடியாதவர்கள்.

**சிங்; எனினும் நீங்கள் இந்தத் திரைப்படம் அரசியல் படம் அல்ல என்று சொல்கிறீர்களா?**

அடூர்; எந்தவிதமான சித்தாந்தத்தையோ நான் போதிக்க வரவில்லை. நடந்தவற்றை உள்ளிருந்து பார்த்த ஒருவரின் அபிப்பிராயமல்ல என்படம். குறித்த சித்தாந்தத்திற்கு எதிரான ஒரு பார்வை வீச்சும் கூட இல்லை அது. உண்மையில் இவை அனைத்திலும் பாதிக்கப்பட்ட ஒருவரின் பார்வையே என்னுடைய படம். ஏனென்றால்– கொம்யூனிஸம் இந்த உலகத்தில் பரிணாமம் பெற்ற ஒரு உன்னதமான தத்துவம் என்று நான் கருதுகிறேன். அந்தத் தத்துவத்தைப் பாதிக்கும் எதுவும் என்னையும் தீவிரமாகப் பாதிக்கிறது.

**சிங்; கட்சியிலேற்பட்ட பிளவு கேரளாவில் மட்டுமல்லவே. மேலும் கொம்யூனிஸம் வேறு வேறு ஆட்களுக்கு வேறு வேறு இடங்களில் வேறு வேறு அர்த்தங்களைத் தருகிறது.**

அடூர்;அதே! பிளவு சர்வேதச ரீதியானவைதான். நான் கேரளாவை மட்டும் பற்றிப் பேசவில்லை. ஆனால் நான் திட்டவட்டமாகவும் அதேநேரம் எனக்குப் பரிச்சயமானவற்றோடும் மட்டும் நிறுத்திக்கொள்ள வேண்டிய தேவை இருந்தது.

**சிங்; எக்கச்சக்கமான குழப்பங்களை விளைவிக்கிற ஒரு உன்னத தத்துவம்.......**

அடூர்; என்னுடைய பாத்திரங்களூடாக லெனினை மேற்கோள் காட்டியிருக்கிறேன். மார்க்ஸிஸிட் கட்சியை சேர்ந்த ஒருவன் லெனின் சொன்னதாகச் சாரபடச் சொல்வான். "பாட்டாளி வர்க்கத்தின் அணிவகுப்பில் ஒவ்வொரு புதிய காலகட்டத்திலும், அடுத்த அடிக்குப் போக முடியாமல் சிலர் பின் தங்கி, அப்படியே விலகிவிடுவார்கள்" என்று.. எவ்வளவு தீர்க்கதரிசனம் வாய்ந்த கூற்று அது.

**சிங்; கட்சிப்பிளவுகள், புதுக் கிளைகள் இவை எல்லாம் சேர்ந்து சாதாரண மனிதனை குழப்பத்திலாழ்த்தி விடுகின்றன.**

அடூர்; சாதாரண மனிதன் முற்றாகவே குழம்பிப்போய் விடுகிறான் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. சின்னச் சின்னக் கட்சிகள் சித்தாந்தத்தை உள்வாங்கிக் கொண்டன. படுபிற்போக்கான கட்சிகள்கூட ஒரேவகையான சுலோகத்தையே எழுப்பின.– இன்குலாப் ஜிந்தாபாத் (புரட்சி ஓங்குக!) உண்மையில் யார் இடதுசாரிகள் யார் வலதுசாரிகள் என்று பிரிப்பதே சிரமமாக இருந்தது!.

**சிங்; புகழ்பெற்ற எலிப்பத்தாயம் படத்திற்குப் பிற்பாடு முகமுகத்தை படமாக்குவதில் கலைப்பாங்கு தொடர்பாக நீங்கள் பிரச்சினைப்பட்டிருப்பீர்களே? ஏனென்றால் எலிப்பத்தாயம் அளவிற்கு கலை நேர்த்தியும் பாங்கும் வந்தே ஆக வேண்டும் அல்லவா?**

அடூர்; உண்மையில் என்னுடைய எந்தப்படமும் அடுத்துவரப்போகும் படத்தைப் பாதிப்பதில்லை. படங்களுக்கிடையே கால இடைவெளி அதிகம் என்பதால் முதல் எடுத்த படம் எனக்கு மறந்தே போய்விடுகிறது.

**சிங்; முகத்தைப் பொறுத்தவரை நறுக்குத் தெறித்த கச்சிதமான ஒரு கதை சொல்லும் பாங்கே தெரிகிறது.**

அடூர்; சரிதான். படம் பார்ப்பவர்கள் சும்மா உட்கார்ந்து எல்லாவற்றையும் விவரமாகத் திரையிலே பார்க்கவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அவர்களும் கூடவே என்னுடைய தேடலில் பங்கேற்க வேண்டும். இத்தகைய தேடலில் முடிந்த முடிவான ஒரு விஷயத்தை நீங்கள் சொல்ல முடியாது. அப்படிச் சொல்லவும் நான் விரும்பவில்லை. இரண்டாவதாக, என்னுடைய பார்வையாளர்களின் நேரத்தை முக்கியமானதாகக் கருதுகிறேன். எனவே திரையில் நான் சித்திரிக்கும் ஒவ்வொரு காட்சி, ஒவ்வொரு ஒலி, ஒவ்வொரு அசைவு, ஒவ்வொரு கணம் அனைத்துமே பார்வையாளருக்கு ஏதாவது அர்த்தத்தை தர வேண்டும்–., ஏதாவதொன்றை நோக்கி இருக்க வேண்டும். நன்றாகத் தெரிந்தவற்றைத் தவிர்ப்பதில் ஒரு சிக்கனத்தைப் பேணுகிறேன்.

எலிப்பத்தாயத்தை விட முகமுகம் எனக்குப் பிடித்திருக்கிறது.

**சிங்; சிறீதரன் திரும்பி வருவதும ஏதோ இன்னொரு கிரகத்திலிருந்து வந்த ஒருவனைப் பார்க்கத் திரள்வது போல மக்கள் மெல்ல மெல்லத் திரள்வதும் உயர்ந்த முறையிலமைந்த கலைப்பாணியாக இருந்தது.**

அடூர்; இந்தப்படத்தையே ஒழுங்கான ஒலியமைப்புடன் நீங்கள் கேட்க வேண்டும்.

→ பார்க்க பக்கம் 12

நன்றி - நூலகத்திட்டம்



மார்ச் 8 பெண்கள் தினத்தை முன்னிட்டு சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையம் சில நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருப்பதாகவும் அதில் 'கொலை' என்கிற நாடகம் ஒன்றும் மேடையேறுவதாகவும் நண்பன் ஒருவன் சிவப்பிக்குக் கூறியிருந்ததன் பேரில் சிவப்பி நாடகம் பார்க்கப் போயிருந்தான் அந்த நண்பனுடன்.

# ஊரான ஊரிழந்தோம் ஒற்றைப்பனைத் தோப்பிழந்தோம்...

மொத்தம் இருபதோ இருபத்தைந்து நிமிடங்கள் கொண்ட ஒரு சிறிய நாடகம். நாடகம் ஆரம்பமான போது ஒற்றைப் பறையொலி மெல்ல ஆரம்பிக்கிறது கூடவே ஊரான ஊரிழந்தோம்; ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம் என்கிற ஒப்பாரிப் பாடலும் துயரை அப்பிப் போகிறது. நெஞ்சில் நடுமேடையில் ஒரு பிரேதம் கிடத்தப்பட்டிருக்கிறது வெள்ளைத்துணியால் மூடியபடி. சில பெண்கள் சூழ இருந்து விம்மி அழுதபடி இருக்கிறார்கள். இன்னும் சிலர் தோரணம் கட்டுவதிலும் செத்தவீட்டிற்கான அடுக்குகளைச் செய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றனர். மேடையின் முன் புறத்தே மூன்று பெண்கள் விடுப்பு கதைப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர். பிரேதமாய்க் கிடக்கிற அந்தப் பெண் ஏன் தற்கொலை செய்தாள் என்பது பற்றிய ஆராய்ச்சியாக இருக்கிறது அவர்களது விடுப்பு.



அவளுக்கு இளைஞன் ஒருவனுடனோ அல்லது பலருடனோ தொடர்பிருப்பதாகவும், அதன் காரணத்தால் அவள் தாய்மையுற்றிருக்கிறாள், அந்த அவமானத்தைத் தாங்காமல் தான் அவள் தற்கொலை செய்திருக்கிறாள் என்பது அவர்களது ஊகம்; முடிவும் கூட.

இந் நேரத்தில் டொக்டர் ஒருவர் வருகிறார். பிரேத பரிசோதனையில் அவரது முடிவு; முதலாவது அவள் கர்ப்பமல்ல. இரண்டாவது அதிர்ச்சியானது; அவள் இதயம் இருந்த இடத்தில் இப்போதிருப்பது ஒரு பிடி சாம்பல் மட்டுமே என்பது. எல்லோரும் அதிர்ந்து போய் இருக்கிறார்கள். இந்நேரத்தில் அவள் குடித்த மருந்துப் போத்தலை ஒரு பெண் கொணர்ந்து டொக்டரிடம் கொடுக்கிறாள். அதைப் பார்த்து விட்டு அவள் சாவதற்கான காரணங்களில் இதுவுமொன்று, ஆனால் அவள் இதாலை தான் செத்தாள் என்று என்னாலை கூற முடியேல்லை என்று கூறியபடி டொக்டர் வெளியேறுகிறார்.

இறந்து கிடந்த அப்பிரேதம் மெல்ல எழுந்து முன் மேடைக்கு வருகிறது. பார்வையாளர் ஒவ்வொருவரையும் கையை நீட்டி நீங்கள் ஒவ்வொருவரும் தான் எனது கொலைக்கு காரணம் என்கிறது. இந்தச் சமூகத்தின் கோளாறான பார்வைகள் தனது இதயத்தையே பொசுக்கிச் சாம்பலாக்கி விட்டதாகச் கூறுகிறது. பெண் என்ற ரீதியில் தான் எல்லா வகையிலும் ஒடுக்கப்பட்டதாகவும், அடிமைப்படுத்தப்பட்டதாகவும், எள்ளிநகையாடலுக்கு உள்ளானதாகவும் கூறுகிறது. இறுதியாக ஓர் எச்சரிக்கையையும் விடுக்கிறது இந்த மாதிரியான சமூகத்தின் கோணல் பார்வைகள் நீடிக்குமாயின் இந்தக் கொலை என்னுடன் முடிவடையப் போவதில்லை. கொல்லப்படப் போவது நீங்கள் ஒவ்வொருவரும் தான் என்பதுடன் நாடகம் முடிவடைகிறது.

நாடகம் முடிந்ததும் சிவப்பி சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தான். பெண்கள் சிலர் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்திலிருந்த நண்பரிடம் "நாடகம் எப்படி?" என்று தனது வழமையான கேள்வியைக் கேட்டு வைத்தான். 'இடைமிடையே ஒலித்த அந்த ஒற்றைப்பாறையும், ஊரான ஊரிழந்தோம் என்கிற அந்த ஒப்பாரிப்பாடலும் இன்னமும் நெஞ்சுக்குள் எதையோ செய்கிறது' என்றார் அவர். சிவப்பிக்கும் அப்படித்தான் இருந்தது. நாலோ ஐந்து வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்து நாடகமேடையில் கேட்ட பாடல் தான் என்றாலும் இப்போதும் அப்படியே துயர் அப்பிப் போயிற்று.

நண்பருக்கு அப்பாலிருந்த பெண்மணி சொன்னார் 'பள்ளிக்கூடப் பிள்ளைகள் தான் நடிச்சது என்றாலும் எங்கட ஊர் கிழவிகள் மாதிரி விடுப்பு, வின்னாணம் கதைப்பதும், நெளிப்பதும் நியாயம் பிளப்பதும் அப்படியே அசலாகச் செய்திருக்கிறார்கள்' என்றார்.

எந்தப் பள்ளிக்கூடம் என்று சிவப்பி விசாரிக்கப் போகக் கிடைத்த தகவல்கள் இவை; கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மட உயர்தர வகுப்பு மாணவிகள் தயாரித்த நாடகம் இது. டி. எஸ். சேனநாயக்கா மகாவித்தியாலயம் நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் முதலிடம் பெற்றது. இதற்கு முதலும் இப்பாடசாலை மாணவிகள் தயாரித்த 'விடுதலையாகும் வெண்புறாக்கள்' நாடகமும் முதலாமிடத்தைப் பெற்றதாம்.

இந்த மாதரி நாடக முயற்சிகளுக்கு ஆர்வமும், ஊக்கமும் கொடுக்கிற நல்லாயன் கன்னியர் மட பாடசாலை அதிபருக்கும் ஆசிரியருக்கும் கை கொடுக்க வேண்டும் போலிருந்தது சிவப்பிக்கு. ●

## முஸ்லிம்...

உணரப்பட்டு புதிய வரையறைகளின் தேவை பரவலாக உணரப்படுகிறது. இந்த புதிய வரையறை உருவாகும் வரை முஸ்லிம் மக்களை தமிழர்கள் என சாதிப்பது நியாயமாகாது.

வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம்களது தனித்துவமான உணர்வுகளையும் அவர்கள் இன்று தமிழ் இனவாதத்திற்கு பலியாகும் நிலைமையையும் கருத்திற்கெடுப்பதுடன் அவர்களைத் தனித் தேசியமாக இனங்காண்பதே பொருத்தமானதாகும். முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது தமிழர் அமைப்புக்களின் கடமையாகும். பலரும் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்றால் அவர்களுக்கு பிரிந்து போவதற்கான உரிமையையும் அங்கீகரிப்பதாகவும் அது தமிழர் நலன்களுக்கு பாதகமானது என்றும் கூறி மறுக்கமுனைவர். முதலில் சுயநிர்ணய உரிமை என்பத னையும் பிரிவினை என்பதனையும் பிரித்துப்பார்த்து புரிந்து கொள்ள வேண்டும். பிரிந்து போகும் உரிமையை அங்கீகரித்து விட்டால் ஒரு இனம் கட்டாயம் பிரிந்து தான் போகும் என்பதல்ல. விவாகரத்துச் சட்டம் குடும்ப அமைப்பையே தகர்த்து விட்டதா என்ன? பல் இனங்களும் சேர்ந்து இருப்பது பெரிய சந்தையை கொடுப்பதாலும் மற்றும் பல வளங்களை பகிர்ந்து கொள்ள உதவுவதாலும் இனங்கள் சேர்ந்து வாழ்வதையே விரும்புகின்றன. எப்போது சேர்ந்து வாழ்வது சகிக்க முடியாததாகிறதோ அப்போது தான் பிரிவினைக் கோரிக்கையை நோக்கி தேசிய இனங்கள் தள்ளப்படுகின்றன. ஆகவே உண்மையான பிரச்சினை முஸ்லிம் மக்களது சுய நிர்ணய கோரிக்கையை அங்கீகரிப்பதா இல்லையா என்பதல்ல. அமையும் தமிழீழத்தில் இப்படிப்பட்டதோர் பிரிவினைக் கோரிக்கையே எழாதவகையில் முஸ்லிம்களது பாதுகாப்பையும், ஜனநாயக உரிமைகளையும் உத்தரவாதப் படுத்துவது எப்படி என்பதே உண்மையான பிரச்சினையாகும். தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் எந்தவொருபுரட்சிகர தாபனமும் தமிழீழத்திலும் சிறுபான்மை இனங்கள் குறித்து விரிவான நீண்ட கால கண்ணோட்டத்தை கொண்டிருப்பது அவசியமானது சிறுபான்மை இனங்களை நசுக்கும் எந்தவொரு இனமும் சுதந்திரமாக இருக்கமாட்டாது என்பதை உணர்ந்து கொண்டால் தமிழீழத்திற்கு உண்மையான ஆபத்து சிறுபான்மை இனங்களல்ல. தமிழ் இனவாதமே என்பதை, புரிந்து கொள்வது சிரமமானதாக இருக்கமாட்டாது. சிறுபான்மை இனங்களின் உரிமை என்பது ஏதோ பெரும்பான்மை இனம் மனமிரங்கிக் கொடுக்கும் சலுகைகள் அல்ல. பெரும்பான்மை இனம் போன்றே ஏனைய சிறுபான்மை இனங்களும் அரசமைப்பதிலும் ஆட்சியதிகாரத்திலும் பங்கெடுப்பதற்கு உள்ள அடிப்படை உரிமையாகும். பெரும்பான்மை இனம் செய்ய வேண்டியதெல்லாம் இதனை அங்கீகரிப்பது மட்டுமே. இதனை அங்கீகரிக்க பெரும்பான்மை இனம் தவறும் பட்சத்திலேயே இனப்பூசல்களும் போராட்டங்களும் வெடித்து பிரிவினை கோரிக்கைகள் எழுகின்றன. ஆகவே சுயநிர்ணய உரிமை என்பது யாரோ கொடுக்கும் பிச்சையல்ல. முரணற்ற ஜனநாயகத்திலிருந்து பிறக்கும் சிறுபான்மை இனங்களின் அடிப்படை உரிமையாகும். பெருந் தேசியத்தால் பலவருடமாக ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனமானது இன்னோர் சிறுபான்மை சமூகமான முஸ்லிம் மக்களது பிரச்சினை தொடர்பாக ஒரு ஆரோக்கியமான கண்ணோட்டத்தை கொண்டிருக்காதது மிகவும் துரதிர்ஸ்டவசமானது. முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே தமிழ் தேசிய இனமும் தனது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு சர்வதேச அளவில் தார்மீக அங்கீகாரத்தை பெறமுடியும். ●

## மகளுக்கு எழுதிய மடல்

பற,
என் கண்ணே பற.
சிறகுகள் விரிய வானை நோக்கி
உயர உயரப் பறந்து போவாய்...
நீலவானும் எல்லையேஅல்ல
தயக்கம் என்பது தடுப்பும் அல்ல..
பற..
ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை
எனது தாயின் தலைமுறை
அடுப்படிக்குள் அடங்கினர்..
எனது தலைமுறை வாசலுக்கு வந்தும்
கணவன் வைத்ததே கட்டுப்பாடு
கிணற்றுத் தவளையாய்க்
காலம் தள்ளினோம் -
பறக்கச் சிறகுகள் இருக்கவில்லை...

சோதரரைக் கொல்லும் கொடிய ஆட்சி
கொலையும் பொய்யும் மலிந்தே கிடக்கும்..
இரத்தம் ஆறாய்ப் பெருகி ஓடும்..
இனிய உயிர்களை இழந்து நின்றோம்..
தனிமை நிறைந்து இருண்ட வேளையும்
நம்பிக்கை இழக்காது
தாங்கிக் கொண்டோம்.
கொடுமை வென்றதாய்க் கதைகள் இல்லையே...
புயற் காற்றெழுந்து கூட்டை உலுப்பும்
வீணர் வெறியெழப் பிதற்றித் திரிவர்
பாலர் கூட்டம் பலியாய்ப் போகும்
பஞ்சம் வந்து தலைவிரித்தாடும்...

கொடுமை வென்றதாய்க் கதைகள் இல்லையே...
மீண்டும் இங்கு விடியல் வரும்
மரங்கள் செடிகள் துளிர்த்து நிற்கும்..
சத்தியம் நீதி ஓங்கி நிற்கும்..
கொடுமை சரியும்
குருவிகள் இரையும்
கண்கள் நிறையும்....

சங்கீதா-நாச்சிமுத்து

## ரெட்டப்பகதிர...

"சொந்த நாட்டில் உயிருக்கு ஆபத்து இருக்கிறது உண்மை தான். ஆனால் சுடுகிற சிங்கள ஆமி எங்களை மனுசர் என்டு நினைச்சுத்தான் சுடுகுது. ஆனால் இந்தியாவில் நாங்கள் மனிசரா மதிக்கப் படுவதே இல்ல நாய்கள விட கேவலமாக மதிக்கப்பட்டு வாழ்வதைவிட மனிசராக மதிக்கப்பட்டு சூடுவாங்குவதோ, சாவதோ மேலானது; கௌரவமானது".

இந்த வார்த்தைகள் தெரிவிப்பது வேறெதையும் அல்ல; நம்பிக்கையின் எல்லாக்கதவுகளும் அடைக்கப்பட்டு விட்ட ஓர் நிலையில் இந்த அகதிகள் இன்று வந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதையே.

திரும்பி வருகிற அகதிகள் "நான் விருப்பத்தின் பேரில் செல்கிறேன் என்ற ஒரு படிவத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டே அனுப்பப்படுகிறார்கள். எழுதப்பட்ட காகிதங்களை வைத்து மனித உயிர்களை மதிக்கிற ஒரு அரசிற்கு வேண்டுமானால் இது ஒரு நியாயப்படுத்த உதவும் சீட்டாக அமையலாம். ஆனால் வரலாறு காகித குறிப்புகளில் என்றும் நம்பிக்கை வைப்பதில்லை. ●

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வு நோக்கி -

சென்ற இதழில் தமிழ் இளைஞர் பேரவையின் முதல் சிதைவு பற்றியும், அச் சிதைவுக்கு காரணங்களாக இருந்தவைகளில் தமிழ் இளைஞர் பேரவைக்கென இறுக்கமான அமைப்பு வடிவம் இல்லாமை, உறுப்பினர்களைக் கருத்து ரீதியாக வளர்த்தெடுக்காமை, கூட்டணியுடனான உறவுகளை கையாளும் போது கவனமாக இல்லாமை என்பவை பற்றிப் பார்த்தோம். இவ்விதழில் பொருளாதார, உதவிக்கு மக்களை சார்ந்திராது கூட்டணியை சார்ந்திருக்க முற்பட்டமை, கூட்டணியினரை வர்க்க ரீதியாக பார்க்கத்தவறியமை போன்றவை பற்றியும். தமிழ் இளைஞர் பேரவையின் அடுத்த கட்ட வரலாறு, சிதைவு என்பனபற்றியும் பார்ப்போம்.

தமிழ் இளைஞர் பேரவையினர் தமது பொருளாதாரம் சம்பந்தமான உதவிகளுக்கு கூட்டணியினரையே நம்பியிருந்தனர். கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடிதத் தலைப்பையே பயன்படுத்தினர். அக்க கடிதத் தலைப்புகளை பயன்படுத்தும் போது கூட்டணியின் ஒரு கிளை அமைப்புத்தான் தமிழ் இளைஞர் பேரவை என்ற உணர்வு மக்களுக்கு வளரும் என்பதை இவர்கள் கவனத்தில் எடுக்கவில்லை. இதை விட தங்களுடைய அலுவலகமாகவும் அவர்கள் கூட்டணி காரியாலயத்தையே பயன்படுத்தினர். தங்களுடைய கருத்து வெளியீட்டு ஊடகமாக கூட்டணியின் பத்திரிகையான சுதந்திரன் பத்திரிகையை பயன்படுத்தினர். தங்களுடைய பிரச்சாரங்களுக்கு கூட்டணி மேடையையே பயன்படுத்தினர். போராட்டங்கள் தொடர்பான நிதிகளுக்கும் அமைப்பின் நிர்வாகம் தொடர்பான நிதிகளுக்கும் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அமைப்பு தமது நிதிக்கு. பரந்துபட்ட மக்களைச்சார்ந்தே இருக்க வேண்டும். மக்களிடம் நிதியைப் பெற்று அமைப்பினை வளர்க்கும் போதே மக்களுக்கும் அமைப்பிற்கும் உள்ள உறவும். வளரும். மக்களிடமும் தம்முடைய அமைப்பு, தங்களுடைய மைந்தர்கள் என்ற உணர்வு வளரும். அமைப்பின் தவறுகளை மக்கள் சுட்டிக்காட்டுகின்ற போது அதனை திருத்திக் கொள்ளவும் வழி கிடைக்கும். எதிரிகள் அமைப்பை சீர்குலைக்கும் போது மக்களின் ஒத்துழைப்பின் மூலம் அதற்கெதிராக போராடவும் முடியும். இந்த உண்மைகளையெல்லாம் தமிழ் இளைஞர் பேரவையினர் உணர்ந்திருக்கவில்லை. இவற்றையெல்லாம் மேற்கொள்வதற்கு கொள்கை ரீதியாக அரசியல் உணர்வு ஊட்டப்பட்ட முன்னணிப் படையென்பது அவசியமாகும். அதுவும் இளைஞர் பேரவையில் இருக்கவில்லை.

இளைஞர் பேரவையின் சிதைவிற்கு பங்காற்றிய இன்னொரு முக்கிய காரணி கூட்டணியினரை வர்க்க ரீதியாக பார்க்க தவறியதாகும். இக் காரணி இளைஞர் பேரவை இக் காலத்தில் மட்டுமல்ல, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், இளைஞர் பேரவை, விடுதலை அணி ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் என்பவற்றின் வரலாற்றுக்காலத்திலும் தொடர்ந்து இருந்தது, இன்றும் கூட அப்போராட்ட சக்திகளிடம் அத்தவறு நீங்கியுள்ளது என கூற முடியாது. ஒவ்வொரு மனிதனினதும், அமைப்புக்களினதும் கொள்கைகள் நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஒரு வர்க்க சிந்தனை என்பது உள்ளது. அவ் வர்க்க சிந்தனையும் அதன் தேவைகளுமே அம் மனிதனையும் அவ் அமைப்புகளையும் வழி நடத்துவதில் பிரதான பங்கினை வகிக்கக் கூடியதாக இருக்கும். இதற்கு கூட்டணியனர் விதி விலக்காக இருக்கவில்லை. கூட்டணியினரின் வர்க்க இருப்பு தமிழ் தரகு முதலாளித்துவ மாகும். அதனுடைய சிந்தனைகளும் தேவைகளும் தமிழ் தரகு முதலாளித்துவத்தினது நலன்களும் சிங்கள பௌத்த முதலாளித்துவ அரசினால் புறக்கணிக்கப் பட்டபடியால் அவர்களும் இலங்கை அரசை எதிர்த்து போராட வேண்டிய நிலையில் உள்ளார்கள். அப்போராட்டத்தை நடத்துவதற்கு பரந்து பட்ட மக்களினது ஆதரவு தேவையாக இருந்தமையாலேயே மக்களின் கோரிக்கையான தமிழ் ஈழ கோரிக்கையையும் தாங்கள் எடுத்துக் கொண்டார்கள். உண்மையில் தமிழ் ஈழ கோரிக்கை கூட்டணியின் கோரிக்கை அல்ல. அதற்கான தேவையும் அவர்களுக்கு இருக்க இல்லை. அவர்களுக்கான தேவையெல்லாம் தமிழ் மக்களைச் சுரண்டுவதே; அதிகார பங்கீடே ஆகும். ஆனால் 1970க்கு பின்னர் மக்கள் இலங்கை அரசில் நம்பிக்கை இழந்து தமிழ் ஈழ கோரிக்கைக்கு தயாரான போது இவர்களால் இக் கோரிக்கையை கைவிட முடியவில்லை. தங்கள் அரசியல் இருப்புக்காக அக் கோரிக்கையை கையில் எடுத்துக் கொண்டார்கள். எனினும் எக் காலத்திலாவது அவர்கள் அக் கோரிக்கைக்கு விசுவாசமாக இருக்கவில்லை. இலங்கை அரசோடு சமரசம் பேசுவதற்கும் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கவுமே தயாராக இருந்தார்கள். இதன் வெளிப்பாடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நடவடிக்கையெல்லாம் அவர்களின் வர்க்க நலன்களில் இருந்து. எழுந்தவையாகும். இவ் வர்க்கக் குணாம்சங்களை தமிழ் இளைஞர் பேரவையினர் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் கூட்டணியினர் போராட்டத்தில் அக்கறையற்றவர்களாக இருக்கின்றார்கள், அவர்களை போராடத் தூண்டுவதன் மூலம் தமிழ் ஈழப் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என நினைத்தார்கள். உண்மையில் கூட்டணியினர் போராடாமைக்கு அவர்களின் வர்க்கத்தன்மை தான் காரணம் என்பதை அவர்கள் உணரவில்லை. அதாவது கூட்டணியினரை வர்க்க ரீதியாக பார்க்கத் தவறியிருந்தார்கள்.

## முதலாவது சிதைவின் பின் தமிழ் இளைஞர் பேரவை

தமிழ் இளைஞர் பேரவை முதலாவது தடவை சிதைவடைந்த பின் அவ் அமைப்பினில் ஆரம்ப தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பாளர்கள் எவரும் இருக்கவில்லை. ஆரம்ப தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியஸ்தர்களாக மயிலிட்டி புஸ்பராஜா, வரதராஜப் பெருமாள், பிரான்ஸிஸ் (சுந்தர்) ஆகியோரே இருந்தனர். இவர்கள் மூவரில் எவரும் பெரும் சிதைவின் பின்னர் அமைப்பினுள் இருக்கவில்லை. இவர்கள் புதிய அமைப்பான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவ் வமைப்பு பற்றி பின்னர் பார்ப்போம். சிதைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்தவர்களே கூடுதலாக இடம் பெற்றனர். இவர்கள் அனைவரும் கூட்டணியினரின் அடிவருடிகளாக இருந்தனர் எனக் கூற முடியாது. இவர்களில் பலர் கூட்டணியினரின் பொய்யான பிரச்சாரத்தை நம்பி கூட்டணியின் கெடுபிடிகளுக்கு துணை போனவர்களாக காணப்பட்டனர். பிற்காலத்தில் கூட்டணியனரின் சுயரூபம் அவர்களுக்கு தெரிந்த போது அவர்களும்



க. உமா மகேஸ்வரன்

அமைப்பை விட்டு வெளியேறி முன்னர் வெளியேறியவர்களை விட தீவிரமாக கூட்டணியினரை விமர்சிப்பதில் ஈடுபட்டனர். அவர்களில் சந்ததியார் உமாமகேஸ்வரன், இறைகுமாரன், உமைகுமாரன், யோகநாதன், வாசுதேவா, திலகவதி, ஊர்மிளா, மண்டூர் மகேந்திரன் என்போர் முக்கியமானவர்களாக விளங்கினர். இவர்களில் சந்ததியார் இளைஞர் பேரவையின் அமைப்பாளராக கடமையாற்றினார். 1976இல் நடைபெற்ற கூட்டணியின் வட்டுக்கோட்டை மாகாநாடு 1977ம் ஆண்டு தேர்தல் என்பவற்றில் இவர்கள் கடுமையாக உழைத்தனர்.

சிதைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின் தலைவர் செயலாளராக முறையே காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, என்போர் இருந்தாலும் கூட அமைப்பின் செயற்பாடுகளில் இவர்கள் பெரிதும் ஈடுபட வில்லை சந்ததியார், இறைகுமாரன், திலகவதி, யோகநாதன், உமா மகேஸ்வரன், ஆகியோரே இச் செயல்பாடுகளில் கூடுதலாக ஈடுபட்டிருந்தனர். அதுவும் உமா மகேஸ்வரன் அமைப்பு வேலைகளுக்கு புறம்பாக அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தலைவர் கே. வி. நித்தியானந்தாவுடன் சேர்ந்து அகதிகளை குடியமர்த்தும் வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார். இப்பணிகளில் இவருடன் சேர்ந்து ஊர்மிளா, திலகவதி, பேபி சுப்பிரமணியம், மண்டூர் மகேந்திரன் ஆகியோரும் ஈடுபட்டிருந்தனர்.

சிதைவிற்கு முன்னரான தமிழ் இளைஞர் பேரவை போன்று இதில் உள்ளவர்கள் அரசியல் ரீதியான போராட்டங்கள் எவற்றையும் பெரிதாக நடாத்தவில்லை. அது பற்றி அக்கறைப்படவும் இல்லை. அரசியல் போராட்டங்களில் ஓர் நம்பிக்கையீனமான நிலையே இவர்களிடம் குடிகொண்டிருந்தது. இதனால் தாங்களாக போராட்டங்களை நடாத்துவதை வீடுத்து கூட்டணியினரின் போராட்டங்களுக்கு ஆட்சேர்க்கும் வேலையையே மேற்கொண்டிருந்தார்கள். கூட்டணியினர் கூட ஆரம்ப இளைஞர் பேரவையின் படிப்பினைகளில் இருந்து இவர்கள் தனியான போராட்டங்களை நடாத்துவதற்கு அனுமதியினை கொடுக்கவில்லை. அவ்வாறு அனுமதியினை கொடுக்கும் போது தங்களை அவர்கள் மிஞ்சி தங்களில் இருந்து விலகிப் போவார்கள் என்றும் அச்சப்பட்டிருந்தார்கள். இதனால் போராட்டங்களை நடத்துதைை விட அகதிகளை குடியேற்றுதல் அக்காலத்தில் தோன்றிய ஆயுத இயக்கங்களோடு தொடர்புகளை பேணுதல் என்பதிலேயே கூடிய கவனம் செலுத்தினர். இதைவிட இவர்களில் சிலருக்கு அரசியல் ரீதியான நடவடிக்கைகளை கூட்டணி கவனித்துக் கொள்ளட்டும் நாம் ஆயுத ரீதியான இயக்கத்தை கட்டுவதிலும் எல்லைப்பிரதேசங்களை காப்பாற்றுவதிலும் அகதிகளை குடியேற்றுவதிலும் ஈடுபட்டால் போதுமானது என்ற கருத்து நிலவியுள்ளது. இவ்வமைப்பின் முக்கியமானவர்கள் தீவிரமாகவும் கடுமையாகவும் உழைத்த போது கூட்டணியினர் தீவிரமான போராட்டங்களை முன்னெடுக்காது சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தமை இவர்களை கூட்டணியினர் பால் அதிப்தி அடையச் செய்தது. இவ் அதிருப்தியீனம் தீவிரமாக வளர்ந்தபோது இவ் அமைப்புக்குள்ளே கூட்டணியினருடன் மோத ஆரம்பித்தார்கள். இம் மோதலின் உச்ச நிலையில் இரண்டாம் தடவையாகவும் அமைப்பு சிதைக்கப் பட்டது. இச்சிதைவிற்கும் கருங்காலியாக சேனாதிராஜாவே பயன்படுத்தப்பட்டார். அமைப்பில் இருந்து வெளியேறியவர்களில் யோகநாதன், இறைகுமாரன் உமைகுமாரன் என்போர் தமிழ் இளைஞர் பேரவை விடுதைல அணி என்ற அமைப்பை உருவாக்கினர். சந்ததியார் காந்தீயத்துடன் அதன் பணிகளில்ஈடுபட்டார்.

**அன்னபூரணா**

இதற்கு சில காலத்துக்கு முன்னரே உமா மகேஸ்வரன், ஊர்மிளா ஆகியோர் 1972ல் உருவாகி வளர்ந்து கொண்டிருந்த புலிகள் இயக்கத்துடன் சேர்ந்து கொண்டனர். பேபி சுப்பிரமணியம், திலகவதி, மண்டூர் மகேந்திரன் போன்றோர், தொடர்ந்து அகதிகள் பணிகளில் ஈடுபட்டனர். பிற்காலத்தில் திலகவதி, பேபி சுப்பிரமணியம் போன்றோர்களும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டனர்.

சிதைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியத்துவம், சிதைவிற்கான காரணங்கள் என்பன பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

## பிரகடனம் ...

புலிகளோ அவசரகால யுத்தத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளனர். வடபகுதி எங்கும் யுத்தகால ஆட்சேர்ப்புக்கான சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் பெரிதும் இளம்பாலகர்களே கவரப்பட்டு பலிக்கடாக்கள் ஆகும் நிலையில் உள்ளனர்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் மேல் பாசமழை பொழிந்த இந்தியாவோ பிரபாகரனின் பிடிவிறாந்தைக் காரணம் காட்டி மீண்டும் ஒருமுறை புகுந்து விளையாட பிரயத்தனம் செய்கின்றது. இலங்கையின் உயர்ஸ்தானிகர் நெவில் கனகரட்னாவோ தேவை ஏற்படின் புலிகளுடன் பேசுவோம் என்கின்றார். யோகியோ இந்தியப் படை, அல்ல எந்தப் படை வந்தாலும் பிரபாகரனை அசைக்க முடியாது என மார்பு தட்டுகிறார்.

இத்தகைய நச்சுச் சூழலில் நவசமசமாஜக் கட்சி, லிபரல் கட்சி முதலியவையும் தமிழ் கட்சிகள் சிலவும் வெள்ளவத்தை ஞானவன்ச தேரோ போன்ற பிக்குகளும் ரெஜி சிறிவர்தனா போன்ற அறிஞர்கள் பலரும் முடிவற்ற அழிவுசெய்யும் யுத்தத்தை நிறுத்தவும், தொண்டாவின் யோசனைகளை பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் வற்புறுத்தி வருகின்றனர்.

பிரபல அறிஞராகிய ரெஜி சிறிவர்தனா கூறியதுபோல் "இந்த யோசனைகள் தமிழீழத்தை வழங்குவதற்கு ஒப்பானது என சிலர் கூறுவது அர்த்தமற்றது ஆகும். உண்மையில் சுவிற்சலாந்து, கனடா அல்லது அமெரிக்க பாணியிலான பூரணத்துவம்பெற்ற உடன்பாட்டிற்கு கூட இது ஒப்பானது அல்ல". ஆயின் கூக்குரல் இடவேண்டியவர்கள் தமிழ்பேசும் மக்களே. மாறாக பேரினவாதக் கட்சிகளும் பேரினவாதிகளும் சந்தோஷப்படவேண்டிய நிலையில் தொண்டாவின் மிகக்குறைந்த யோசனைகளுக்கே ஈழத்திற்கு ஒப்பானது என கூக்குரல் இடுகின்றனர். ஆயின்தமிழ்பேசும் மக்களின் நிலைதான் என்னே!

பேச்சுவார்த்தை ஆரம்பமாவதும் பின்பு முறிவதும், ஒப்பந்தம் எழுதுவதும் பின்பு கிழித்து எறிவதும், ஹில்டனுக்கு வருவதும் பின் காட்டுக்கு செல்வதும் சுயநிர்ணய உரிமையைக் கோருவதும் பின் துரோகம் இழைத்து அரசுடன் இணைவதும் மக்களுக்குப் புதிதானது அல்ல.

இவை யாவற்றுக்கும் அடிப்படையில் கட்சி நலன்களையோ தனிநபர் நலன்களையோ இருப்பைப் பேணும் நடவடிக்கைகளோ அல்லது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கருவியாக இனவாதத்தை பயன்படுத்துவதையோ நிராகரித்து முதலில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதோ அன்றி அனைத்துக் கட்சி மகாநாட்டை நடத்துவதோ விளலுக்கு இறைத்த நீராகவே அமையும் என்பதை வரலாறு பூர்வமாக உணருதல் வேண்டும்.

ஆனால் ..........இதைச் செய்வது யார்?

கலியாணம் கட்டினால் - பைத்தியம் தீரும். பைத்தியம் தீர்ந்தால் தான் கலியாணம் நடக்கும் என்ற ஒன்றைக் கொன்று முரணான ஒரு விசக் கொழுக்கி நிலை இது.

வாலாற்றக் குருடர்களால் வழிநடாத்தப்பட முடியாதது வரலாறு என்பதை எப்போது தான் நாம் புரிந்து கொள்ளப் போகிறோமோ?

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல 6 அலோசாலை கொழும்பு - 3 தொலைபேசி - 574047.


# சிறைச்சாலைகள் உண்டு நீதிமன்றங்களை நிறுவுகிறோம் - புலிகள் அறிவிப்பு

புலிகள் சட்ட ஒழுங்கு அமைப்பொன்றை தாபித்துள்ளதாகவும், சிறைச்சாலைகளை அமைத்துள்ளதாகவும், குற்றவாளிகளை விசாரிக்கவும், தண்டனை வழங்கவும் சர்வதேச சட்ட ஒழுங்குகளுக் கமைந்த நிரந்தர நீதி மன்றங்களை நிறுவி வருவதாகவும் லண்டனிலுள்ள புலிகளின் சர்வதேச செயலகம் பெப்ரவரி 18ந் திகதி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ஐ.நா. சபையின் மனித உரிமைகள் குழுவின் அறிக்கையில் எமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெறுவது சுட்டிக் காட்டபட்டுள்ளது. நாம் ஒரு நெருக்கடியான சூழ்நிலையிலும் சட்ட ஒழுங்கையும் நிர்வாகத்தையும் சர்வதேச சட்டத்திற்கமைய நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறோம். சிறைச்சாலைகளை நடாத்துவதற்கு நாம் சிறைக் காவலர்களைச் சேர்த்து வருவதோடு பொலிஸ் படையையும் உருவாக்கியுள்ளோம். ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிறைச் சாலையிலுள்ள கைதிகளை உறவினர்களும், சர்வதேச மனித உரிமைகள் இயக்கங்களும் சென்று பார்வையிடலாம். சிறையிலுள்ள கைதிகள் தேசிய, சர்வதேசிய சட்டங்களுக்கமைந்த சூழ்நிலைகளில் மனிதாபிமானத்துடன் எந்நேரமும் பேணப்படுவார்கள் எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரகடனப்படுத்தாத யுத்தம்

யுத்தம் வட்டமேசை, சதுரமேசை உடன்படிக்கை இவையாவும் யாருக்காக? ஆட்சியாளர் நலனுக்காக யார் சொன்னார் மக்களுக்காக என, மக்கள் வெறும் பகடைக்காய்கள் தானே?

ஆம் பிரித்தானியர் காலத்தில் இருந்து இற்றைவரை சீர்திருத்தங்கள் வந்தன; யாப்புகள் மாறின; வெள்ளைத்தோல்கள் போய் கறுப்புத் தோல்கள் வந்தன. எஸ்.எல்.எப்.பி. போய் யு.என்.பி. வந்தது கூடவே இடதுசாரிகளும் போனார்கள். யார் போய் யார் வந்தாலும் யாருக்கு என்ன பயன்?

ஆனாலும் நப்பாசை விட்டதில்லை. எல்லோரும் ஏறி விழுந்த சமாதானக் குதிரையில் தொண்டாவும் ஏறி விழுந்ததும் ஒரு கதையாகிப் போனது.

வடகிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும். அவை தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என அங்கீகரிக்கப்பட வேண்டும், வடகிழக்கு மக்கள் தம்மைத் தாமே ஆளும் உரிமை வழங்கப்படவேண்டும் என்ற யோசனைகள் அமைச்சர் தொண்டாவினால் தெரிவிக்கப் பட்டன.

ஆனால் வரலாறு பூர்வமான இலங்கையின் துரதிஷ்டம் நீறுபூத்த நெருப்பாய் இருந்த இனவாதத்தை மீண்டும் தென்பகுதியில் கக்கத் தொடங்குவதற்கு காரணம் ஆகிவிட்டது.

இனவாதத்துக்கு எதிரானவர்கள் எனக் கோஷம் இட்டவர்களும் இனவாதத்தைக் கக்கமுடியாமல் தொண்டைக்குள் வைத்து இருந்தவர்களும் இலைமறை காய்களாக இருந்த இனவாதிகளும் பச்சைப்படியாக இனத்துவேச சேற்றை வாரி இறைக்கத் தொடங்கினர்.

"தூங்கிக் கிடந்த சிங்கங்களைத் தட்டி எழுப்பிவிட்டது தொண்டாவின் யோசனைகள்" என யு.என்.பி.யின் முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய கூறியதும், யுத்தம் முடியும் வரை பேச்சுவார்த்தை வேண்டாம் என களனிப் பல்கலைக்கழக அறிவுக் களஞ்சியப் பேராசிரியர் வல்பொல ராகுலதேரர் கூறியதும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே வழி என சுதந்திரக் கட்சி எம்.பீ. எஸ்.எல். குணசேகர கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கன.

இவை ஒருபுறமிருக்க முன்னாள் அமைச்சர் பெருந்தகை காமினி ஜயசூரிய தலைமையிலான மகாபோதி சங்கத்தினரும், சுதந்திரக் கட்சியின் அரவணைப்பில் அதன் 40க்கு மேற்பட்ட எம்.பீ.க்கள் பலரால் உருவாக்கப்பட்டு பின் கண்துடைப்பாக தடைசெய்யப்பட்ட "ஹெல உறுமய" இயக்கத்தினரும் மாண்புமிகு ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும் பௌத்தசாசன அமைப்புக்கான ஆலோசனைக் குழுவில் இருக்கும் மதகுருமாரும் சிங்கள தேசியத்தைக் காக்கவும் தொண்டாவின் யோசனைகளை சிதறடிப்பதற்கும் நாடுபூராகவும் பலமான பிரச்சாரங்களை முடுக்கி விட்டுள்ளனர்.

நாட்டை ஆளும் கட்சியின் மந்திரிசபையின் முக்கியமான அமைச்சரினாலேயே முன்மொழியப் பட்ட யோசனைகள், அவ்வமைச்சரவையாலேயே நிராகரிக்கப்படும் நிலையில் உள்ளன.

அதே வேளை தொண்டமான் அல்ல வேறுயார் சொன்னாலென்ன புலிகள் ஆயுதங்களைக் கீழே போடும்வரை யுத்தம் தொடரும் என மாண்புமிகு பிரதமர் (பாதுகாப்பு அமைச்சரும் கூட) கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார்.

இதுவரையில் ஜனாதிபதியோ, ஆளும்கட்சியோ அல்லது அமைச்சர்வையோ தொண்டமானின் யோசனைகள் பற்றி கருத்தில் எடுக்கவில்லை,"மௌனம் கலக நாஸ்தி" என்பார்களோ?

புலிகளோ நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் எனவும் பாராளுமன்ற தெரிவுக்குழுவோ பிக்குகளோ தொண்டமானோ சமாதான முயற்சியை மேற்கொண்டு வடபகுதி வரலாம் எனவும் அறிவித்து உள்ளனர்!

ஆரம்பத்தில் தொண்டமானின் யோசனைகளை ஆதரிப்பது போல் மௌனம் சாதித்தது அரசு. காரணம் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் பாரீஸில் நடைபெற இருந்தமை ஆகும். இது அரசிற்கு சாதகமாகவும் இருந்தது. ஆனால் கேட்ட உதவியைவிட 50லட்சம் டொலர்கள் அதிகப்படியாக உதவி கிடைத்தபின்பு தொண்டமானின் வடபகுதிக்கான பயணத்தை அரசு தடுத்து நிறுத்தி சமாதானப் பேச்சுக்கு மறுப்புத்தெரிவித்து உள்ளது. இதன்மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தீர்வு யோசனைகள்

### சிவமூர்த்தி

சாத்தியம் அற்றுப்போய் உள்ளன.

பதிலாக அரச தரப்பில் உள்ளார்ந்த ரீதியில் இராணுவத் தீர்வை நோக்கிய நகர்வையே அனுமானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண தீபகற்பத்தை கைப்பற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அதன்படி காலவரையறை அற்ற ஊரடங்கைப் பிறப்பிப்பதன் மூலம் தாக்குதல்களை பெரிய அளவில் தொடுக்காமல் மனோவியல் சார்ந்த தாக்குதல்களை ஏற்படுத்தும் முயற்சி முதலில் ஆரம்பமாகியுள்ளது. வன்னி விக்கிரம 3 என்ற இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக வன்னிப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் பின் தீபகற்பத்தை கைப்பற்றுவதுமான திட்டத்தில் யுத்தத்தை அரசு நகர்த்துகிறது.

மொத்தம் 7700C படைகளில் 45000 படையினர் வடக்கில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தைக் கைப்பற்றும் யுத்தம் ஆரம்பிக்கப் பட்டபின் 10,000ற்கு மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்படும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பார்க்க பக்கம் 11

## உயிர்த்தெழுதல்

*இன்று மீண்டும் புத்துயிர்த்தேன்
இயேசு பிரானைப் போல
சிலுவையில்
கைவிரல்களை தாங்க ஆணி அறைந்து
ரத்தம் கசிந்து கிழிந்து
இந்தக்காலத்தில் இறந்திருக்கத்தேவையில்லை.*

*நான் இறந்திருந்த நாட்களில்
மப்புசு கொட்டி துக்கம் சொரிந்தது எனக்காக
மழை நகரத்தில் அடித்துக் கொண்டு பெய்து
என் அறையில் சில புத்தகங்களையும் நனைத்து,
நிலம்முழுவதும் தண்ணி கசிந்தும், ஓடியது.*

*சோவியத் நாவல்களைப் படித்துக்
-கொண்டிருப்பேன்
மரணத்துக்குப் போகும் வழியில் நித்திரை
-தொள்ளவைக்கும்
நேரகாலம்
சும்மா போனது துயிர்த்து வருத்தும்.
இரவுகளில் வாய்திறந்து ஒரு வார்த்தையேனும்கூடபேச
சோம்பலுற்றுக் கிடந்தேன்
எல்லாம் ஆகிவிட்டது இனி என்ன ?
என்று என் வாய் முணுமுணுக்கிறது
எழுதித் கொண்டிருக்கிற நாவல்
இந்நாட்களில் தொடர்ந்து போகாது.*

*நாவலில்
19ம் நூற்றாண்டு வீதியிலிருந்து
டிராம் வண்டிகள் ஓடிய சத்தம்,
பனிக்கட்டிகள் நொருங்குபடும் ஆறுகள்
இந்த மாதிரியான நதி வற்றிவரண்டு விட்டது.*

*ஒற்றைகளை புரட்டுவேன் இரண்டு வரி எழுதுவேன்.
போர்க்காலத்தில் பனிக்காலமும் வந்து விட்டது
முனைப்பும் உயிர்கொண்ட குதிரைச் சவாரியும்
எங்கே போயின ?*

*இன்று மீண்டும் புத்துயிர்த்தேன்
என்ன
கொஞ்சநேரம் பிந்நேரம் 2 ஆட்டம் Chess
விளையாடினேன்
தார்றோட்டும் தெரியாமல் இருண்டபிறகு
இயக்கத்துக்குப் போன நண்பர்களையும்
தெரிந்துகொண்டு
திரும்பினேன்.*

- நட்சத்திரன் செவ்விந்தியன்

### நடிக்கை...

நான் வெகு சாதாரணமான ஒலிகளையே பயன்படுத்தியிருக்கிறேன். காலையை அறிவிக்கும் ஒரு குருவிக் கரைவு; மிகச் சாதாரணமானதுதான். எனினும் காலையைக் குறிக்க இதனையே நான் தொடர்ந்தும் பயன்படுத்தியுள்ளேன் (சிரிக்கிறார்) ஆலைச் சங்கொலி பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுகிறது. மற்றும் சர்வதேச கீதமும் பயன்பட்டுள்ளது. லெனினுடைய படம் சுவரில் மேலேறுகிறபோது முதல் தடவையாக இந்தக் கீதத்தை நான் பயன்படுத்துகிறேன். மிகவும் முக்கியமான சம்பவத் தொடர் அது.

சிறீதரனுடைய முகம் படத்தின் கண்ணாடியில் பிரதிபலிக்கப்படுவதை முக்கியமாக அவதானிக்க வேண்டும். லெனினுடைய படமும் சிறீதரனுடைய படமும் இணைகின்றன. படத்தின் முடிவில் சிறீதரனுடைய இந்த விம்பமே மேலோங்குகிறது. அப்போது சர்வதேசிய கீதம் முழுதாகவே பாடப்படுகிறது. கட்சிக்காரியாலயம் தாக்கப்படுகிற போதும் பின்னர் லெனினுடைய விம்பம் எழுகிறபோதும் விஷயம் ஒன்றுதான். முதலில் வீழ்ச்சி; பின்னர் உயர்வு.

**சிங்; இந்தப்படம் பற்றிய எண்ணக்கரு நீண்டகாலமாக உங்களுடைய மனதில் இருந்ததாகச் சொல்லி யிருக்கிறீர்கள்.**

அடூர்; முகமுகத்தின் முதலாவது வரைவு எலிப்பத்தாயத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே எழுதப்பட்டது. பின்னர் எலிப்பத்தாயம் முடிந்த பிறகு முகமுகம் பிரதியை எழுதினேன். மொத்தமாக நாலு வருடங்கள்.-

### ரஞ்சனை...

வெளிப்படுத்துகிறார். இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து வெளியாகும் மலையாளப் பத்திரிகையான 'மாத்ரு பூமி'க்கு பிரபாகரன் கொடுத்துள்ள பேட்டியில் இதன் விபரங்களை அவர் விபரித்துள்ளார்?

ரஞ்சன் அமைச்சராக இருந்த காலத்தில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளும், நடந்து கொண்ட முறைகளும் அவரைச் சூழ இருந்த சில அரசியல் வாதிகட்குப் பிடிக்கவில்லை. இதிலிருந்தே ரஞ்சனைக் கொல்வதற்கான காரணங்கள் உருவாகின.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கெதிராக ஒழுக்கவழுவுரைக் (இம்பீச்மென்ற்)காலத்தில் அவருக்கெதிராக வைக்கப்பட்ட காரணங்களில் ஒன்று பிரேமதாச ஜனாதிபதியாயிருந்த போது புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்பது. ஆனால் பிரேமதாச பிரதமராயிருந்த காலத்தில் தமக்கு ஆயுதம் தந்ததாக பிரபாகரன் இப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

→ பார்க்க பக்கம் 8

சரிநிகர் மாத இதழ் இல 6, அலோசாலை, கொழும்பு 3. இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால் கொழும்பு 10 லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

15.03.1992